Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TOURS (PVT) LTD.
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field.
உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 02 ஹிஜ்ரி 1428 துல்கதா 14 (17.12.2005) சனிக்கிழமை இதழ் 81

# மார்ச்சில் நாடாளுமன்றத் தேர்தல்!

## புலிகளை பேச்சுக்கு வருமாறு அரசு கடிதம் மூலம் அழைப்பு!

### அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தகவல்



கொழும்பு —

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சு நடத்த முன்வருமாறு நோர்வே அனுசரணையாளர் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தத் தகவலை வெளியிட்டார்.

இங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா - (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டம்!

கொழும்பு —

**தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.**

அடுத்த வருடம் சிங்கள - தமிழ் புதுவருடத்துக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

ஜனதிபதித் தேர்தலில் தான் பெற்ற வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள மகிந்த ராஜபக்ஷ விரும்புவதாகவும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் புதிய தேர்தலை மார்ச் மாதமளவில் நடத்த அவர் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது நாடாளுமன்றத்தில் சிறுபான்மையான நிலையிலேயே அரசாங்கம் உள்ளது. இதனால் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றின் உதவியுடனேயே ஆட்சியை நடத்தவேண்டிய நிலை உள்ளது.

இந்த நிலையில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காகவே மார்ச் மாதமளவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## கருணா குழு உறுப்பினர் சுட்டுக்கொலை!

கொழும்பு —

பொலனறுவ மாவட்டத்திலுள்ள குடாபொக்குன என்ற இடத்தில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குடாபொக்குணவைச் சேர்ந்த புலேந்திரன் சிவராசா (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.25 மணியளவில் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது - அங்கு சென்ற இருவர் நெருக்கமாக நின்று பிஸ்டலால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக பொலிஸார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## 'நமது ஈழநாடு' மீதான சோதனை; சுதந்திர ஊடக இயக்கம் கவலை!

கொழும்பு —

யாழ்ப்பாணத்தில் நமது ஈழநாடு அலுவலகத்தில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் முன்னனுமதியின்றி மேற்கொண்ட தேடுதல் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர ஊடக இயக்க பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழான நமது ஈழநாடு அலுவலகத்தில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை கவலையளிக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 4 முக்கிய நாளிதழ்களில் நமது ஈழநாடும் ஒன்று.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் தனிநாடு கோரி ஆயுதமேந்திப் போராடும் தமிழ்த் தேசிய சக்திகளுக்கு ஆதரவாக தமது தலையங்கங்களை யாழ்ப்பாணத்தின் 4 நாளிதழ்களுமே எழுதிவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக அதிகரித்துவரும் வன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் தாக்குதலில் இருமாணவர்கள் காயம்!

யாழ்ப்பாணம் —

நல்லூர் முருகன் ஆலய பின்வீதியில் நேற்றிரவு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்விபயிலும் ச.நிசன் மற்றும் விஜிதரன் ஆகிய இரண்டு மாணவர்களே காயமடைந்தவர்களாவர்.

நேற்று மாலை குறித்த மாணவர்கள் இருவரும் பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவேளை இவர்களை வழிமறித்த இராணுவத்தினர் (12 ஆம் பக்கம்பார்க்க)


## நடமாடும் சத்திரசிகிச்சைக்கூடம் கொழும்பில் கடற்படையினர் தடுப்பு!

கொழும்பு —

## இராணுவத் தளபதியுடன் அமெரிக்கத் தூதர் சந்திப்பு!

கொழும்பு —

## கொழும்பில் கடற்படையினர் தடுப்பு!



கொழும்பு —

இத்தாலிய அரசாங்கத்தால் - யாழ்ப் பாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வைத்திய சேவையை வழங்குவதற்கு அன்பளிப்பாக வழங்கப் பட்ட நடமாடும் சத்திரசிகிச்சை வாகனத்தை கொழும்பு துறைமுகத்தில் கடற்படை யினர் தடுத்துவைத்துள்ளனர்.

40 அடி நீளமான கொண்டெய் னர் ஒன்றில் நவீன வசதிகளுடன் வடிவமைக் கப்பட்ட இந்த நடமாடும் சத்திரசிகிச்சைக் கூடம் இத்தாலியில் இருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)


## அமெரிக்கத் தூதர் சந்திப்பு!

கொழும்பு —

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்றீட் கொழும்பி லுள்ள இராணுவத் தலைமையகத் துக்கு நேற்று விஜயம் செய்து இராணு வத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன் சேகாவுடன் பேச்சுக்களை நடத்தினார்.

அமெரிக்கத் தூதரக பாதுகாப்பு ஆலோசக ருடன் சென்றிருந்த ஜெப்ரி லன்ஸ்றீட் இந்தச் சந் திப்பின்போது இரு தரப்பு முக்கிய விவகாரங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து பேசப் பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித் தது.

18 ஆவது இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் சரத் பொன்சேகா (12 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ்ச்செல்வனுடன் தொண்டமான் சந்திப்பு!

கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்று காலை சந்தித் துப் பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் இன்று காலை 11 மணி யளவில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஆறு முகன் தொண்டமான் எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். தமிழ்த் தரப் பினர் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

# படையினரின் தேடுதல்களுக்கு யாழ். அரசியற்துறை கண்டனம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க் கையை பாதிக்கும் வகையில் இராணுவத்தி னர் திடீர் திடீரென சுற்றி வளைப்புகளையும், தேடுதல்களையும் நடத்தி வருகின்றனர். இரா ணுவத்தினரின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தி யில் எதிர்ப்புணர்வையும் - ஆத்திரத்தையும் ஏற் படுத்தியுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட தலைவர் அரிபெக்கா பளையி லுள்ள அரசியற்துறை அலுவலகத்தில் மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் கண்ண னைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இந்தச் சந்திப்பின்போது மாவட்ட அரசியற் துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் மேலும் தெரிவித்ததாவது -

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக் கும் வகையில் இராணுவத்தினர் திடீர் திடீரென சுற்றிவளைப்புக்களை நடத்தி வருகின்றனர். வீடுகளில் இராணுவத்தினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் தாழமுக்கம்; மட்டக்களப்பில் மழை!

கொழும்பு —

வங்களா விரிகுடாவில் மீண்டும் ஏற்பட் டிருக்கும் தாழமுக்கத்தால் யாழ். குடாநாடு உள் ளிட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சீரற்ற கால நிலை காணபடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கிழக்குப் புறமாக 350 கிலோமீற்றர் தொலைவில் வங்காள விரி குடாவில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதால் மட்டக் களப்பு மாவட்டத்தில் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்துவருகிறது.

நேற்றுக்காலை 6 மணிமுதல் தொடர்ந்து மழை பெய்துவருவதாக வும் நேற்று மாலை 4 மணிவரை 11.6 மில்லி (12 ஆம் பக்கம் பார்க்க)

TILKO Holidays

Tilko Holidays [Pvt] Ltd.

Jaffna City Hotel

70/6 KKS Road. Jaffna.

TP: 021 222 5969 , Fax: 021 222 7291

E-mail: tilkoholidays@yahoo.com.

குளிரூட்டப்பட்ட அறைகள், பல் அலைவரிசை தொலைக்காட்சி, சுடுநீர் வசதி மற்றும் போக்குவரத்து, தொலைபேசி, இணைய (Internet) வசதிகள். வெளிப்புற கொண்டாட்டங்களுக்கான பூந்தோட்டம், வாகன தரிப்பிட வசதிகளுடன்.

# பல்கலைக்கழகத்தை சூழவுள்ள இராணுவத்தினரை

# அகற்றாவிடின் தொடர்போராட்டத்தில் குதிப்போம்!

## முகாமைத்துவ மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

தமிழ் மக்கள் மீதும் மாணவர்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் அச்சுறுத்தலை உடன் நிறுத்துவதுடன், யாழ்.பல்கலைக்கழகத்தைச் சுற்றிக் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரையும், அங்குள்ள காவலரண்களையும் அகற்ற வேண்டும். இதனைப் பொருட்படுத்தாது இராணுவம் தொடர்ந்து செயற்படுமானால் அவர்களுக்கு எதிரான தொடர் போராட்டங்களில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும் என யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமாணவர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் அடாவடித்தனங்களை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இவற்றினூடாக விடுதலைப்புலிகளை சீண்டி ஆத்திரமூட்டுவதனூடாக அவர்களை போருக்கு இழுக்கும் வகையில் மக்கள் மீதும்,அடக்குமுறைகளைத் திணித்து வருகின்றது.

எமது பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ இராணுவத்தை நிறுத்துவதையும், ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் வன்மையாக ஆட்சேபிப்பதுடன்,அன்றாட நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும்எந்தவொரு செயற்பாட்டையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

இராணுவம் பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள இடங் களை விட்டு அகலவேண்டுமென்றும், இராணுவ காவலரண்களை அகற்றுவதுடன், மாணவர்களையும் மக்களையும் அச்சுறுத்து வதையும் உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை இராணுவம் தொடர்ந்து மேற்கொள்ளும் பட்சத்தில் நாம் அவர்களுக்கு எதிரான தொடர்போராட்டங்களில் குதிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

யாழ்.குடாநாட்டிலும் ஏனைய இடங்களிலும் நடைபெறும் இவ்வாறான செயற்பாடுகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கண்டும் காணாதது போல் இருக்கும் பாரபட்சமான நிலைமையைக் கண்டு நாங்கள் வருத்தமடைகிறோம்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களினதும் மாணவர்களினதும் இயல்பு வாழ்க் கைக்கு இடையூறு ஏற்படுவதை நிறுத்தும்படி வேண்டுகின்றோம்.

தொடர்ந்தும் இராணுவத்தின் அடாவடித்தனம் இடம்பெறின் இராணுவத்தினருக்கு எதிராக மிகப்பாரிய அளவிலான எதிர்ப்புப் போராட்டங்களில் குதிக்கவேண்டிய நிலை ஏற்படும். அதையும் இராணுவம் அடக்க முற்பட்டால் அவர்களது பாணியிலேயே நாங்களும் எதிர்கொள்ளத் தயாராக வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## இரத்ததானம்

யாழ்ப்பாணம்

அமரர் மௌனகுரு செல்வகுருவின் நினைவு தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர்கள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இரத்ததானம் செய்யவிரும்புவோர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.இங்கு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கிக்கிளையினர் குருதி சேகரிக்கவுள்ளனர்.

## சிறுவர் பாதுகாப்பு குழுக்கூட்டம்!

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட சிறுவர்பாதுகாப்பு குழுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பாதுகாப்பு குழு தலைவரும் யாழ்.அரசாங்க அதிபருமான கே.கணேஸ் தெரிவித்தார்.


சுன்னாகம் நாகமஸ்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு

அக்ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த




தற்காலிக புதியநேர மாற்றம்

காட்சிகள்:- காலை 10.30,1.30,4.30, 7.30 (ப.நே)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்

பிரசன்னா, மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த

கஸ்தூரிமான்

காட்சிகள்:-10.30,2.30, 6.30 , 9.30 (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

ஷாம், சினேகா, அபர்ணா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

ABCD

காட்சிகள்;-10.30, 2.00 (புதிய நேரம்)

Super Star Hero

TOM CRUISE in

WAR OF THE WORLD

காட்சிகள்;-5.15, 8.15, (புதிய நேரம்)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### சந்தைகள் இறைச்சிக்கடைகள் -2006

### குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

**கீழ்க்காணப்படும் இறைச்சிக்கடைகள், சந்தைகள் என்பவற்றுக்கான 01.01.2006 - 31.12.2006 ஆம் திகதி வரையான 1 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது.**

**படிவக்கட்டணம் ரூ 300 (வற்வரி நீங்கலாக)**

**கேள்வி விண்ணப்ப முடிவுத் திகதி 27.12.2005 ந.ப 12மணி**

**கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 27.12.2005 பி.ப 2 மணி**

**கேள்வி திறக்கப்படும் நேரம் 27.12.2005 பி.ப 3 மணி**

| சந்தைகள் | மீளளிக்கக் கூடிய பிணைப்பணம் | சபையால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|
| பண்ணை மீன் சந்தை | 10, 000 | 1, 564,865 |
| பெரியகடை மரக்கறிச் சந்தை | 10, 000 | 530,535 |
| குருநகர் சந்தை | 10, 000 | 865,550 |
| செங்குந்தாச் சந்தை | 10, 000 | 432,940 |
| பாசையூர் சந்தை | 2, 500 | 39,500 |
| வாகனத்தரிப்பிடஅறவீடு | 5, 000 | 500,000 |
| படிவக் கட்டணம் ரூ500-75 வற்வரி) | | |
| **இறைச்சிக்கடைகள்** | | |
| செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல 01 | 2,500 | 108,400 |
| செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல 02 | 2,500 | 128,050 |
| புங்கங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 2,500 | 40,400 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 1 | 2,500 | 162,000 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 2 | 2,500 | 113,000 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 4 | 2,500 | 60,000 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 5 | 2,500 | 40,000 |
| நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல 6 | 2,500 | 25,000 |
| நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல 10 | 2,500 | 6,800 |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை இல 11 | 1,000 | 3,900 |
| நாவாந்துறை கருவாட்டுக்கடை இல 12 | 1,000 | 3,000 |
| குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல 7 | 5,000 | 80,600 |
| பாசையூர் மாட்டிறைச்சிக்கடை இல 7 | 2,500 | 111,700 |
| நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை | 5,000 | 183,000 |

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்**

**சி.வி.கே.சிவஞானம்**
**ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்**

(சி-4920)

## தமிழர்மீதான கெடுபிடிகளை நிறுத்தாவிடின் மக்கள் படை உரியபாடத்தைப் புகட்டும்

### கோப்பாய் மக்கள் விழிப்புணர்வுக் கழகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

தமிழ் மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைக்கும் வகையில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் சோதனைக் கெடுபிடிகள் துன்புறுத்தல்களை உடன்நிறுத்த வேண்டும். இல்லையேல் தமிழினத்தின் தற்காப்பு கவசமாக அமைக்கப்பட்டுள்ள மக்கள்படை தகுந்த பாடம் புகட்டும்.

இவ்வாறு கோப்பாய பிரதேச மக்கள் விழிப்புணர்வுக் கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடக்கு-கிழக்கில் அரசபடைகளால் தொடர்ந்து நடத்தப்படும் ஒவ்வொரு சம்பவங்களையும் உற்று நோக்கும் போது- அவர்கள் சமாதானம் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது பாரிய யுத்தம் ஒன்றைத் திணிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றனர். என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

கல்விச் செயற்பாடுகளை குழப்புமுகமாக மாணவர் சமூகத்துக்கு எதிரான தமது அடாவடித்தனங்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஆக்கிரமிப்பு படைகள் தம்வசம் உள்ள பாடசாலைகளில்இருந்து வெளியேறவில்லை. மாறாக தமது நிலைகளை பலப்படுத்தி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தடையாக இருந்துவருகின்றனர்.

இந்த நடவடிக்கைகள் மாணவர்களை வலிந்து போருக்கு இழுக்கம் செயற்பாடுகள் ஆகும். மேலும் போருக்கான முன் ஏற்பாடாக அண்மைக் காலங்களில் இந்திய அரசின் இராணுவகடற்படைத் தளபதிகளின் வருகை இலங்கையை நோக்கி நகர்ந்துள்ளது. இதன் ஒரு கட்டமாக அண்மையில் கடற்படைக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் இந்திய கடற்படையின் பாரிய போர்க் கப்பல்கள் கொழும்பை வந்தடைந்தன.

இந்த நடவடிக்கைகள் மூலம் அரசு பாரிய போர் ஒன்றைக் தொடங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.

தமிழ் மக்கள் மீதான அரசபடைகளின் அடாவடித்தனங்களால் இழப்புகள் ஏற்படும் போது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கமும், அரச படைகளும் தமது தரப்பில் இழப்புக்கள் ஏற்டும் போது மட்டும் பாரிய தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைப்பது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசு தமிழ் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வைத்தரும் என்பதில் துளி கூட நம்பிக்கையில்லை. இவை கடந்தகால அரசுகள் தமிழ் மக்களுக்கு கற்று தகுந்த பாடம்.

மக்களின் அன்றாட வாழ்வைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள், மக்களை அச்சுறுத்தும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் என்பவற்றை பாரியயுத்தம் ஒன்றைத் திணிப்பதற்கான அறி குறியாகவே நாம் கருதுகின்றோம்.

அரசோ, அரசபடைகளோ தங்களின் இவ்வாறான செயற்பாடுகளை அரங்கேற்றுவார்களானால் விளைவுகள் விபரிதமானவையாக அமையும் என்பதையும் எமது விடுதலையை நோக்கிய புனிதபணியில் ஈடுபடவேண்டியநிலை ஏற்படும்.

தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி தமது ஆதிக்கத்தை நிலை நாட்டி விடலாம் என்ற அற்ப ஆசை ஒரு போதும் நிறைவேற மாட்டாது. எனவே உடனடியாக அராஜக நடவடிக்கையை நிறுத்த வேண்டும். இல்லையேல் எமது இனத்தின் தற்காப்பு கவசமாக அமைக்கப்பட்டுள்ள மக்கள் படை தகுந்த பாடம் புகட்டும் என்பதை மிக எச்சரிக்கையுடன் தெரிவித்துக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம்
### பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை நெறிக்கான அனுமதி - 2006

**மேற்படி கற்கை நெறிக்கான அனுமதித் தேர்வு 18.12.2005 அன்று நடைபெறமாட்டாது. 24.12.2005 காலை 9.30 மணிக்கு நடைபெறும். விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் அடையாள அட்டையுடன் வர வேண்டும்.**

(சி-4921)

**பதிவாளர்.**

### வாகனம் வாடகைக்கு அமர்த்தல்

எமது நிறுவனத்தின் செயற்பாடுகளிற்கு ஒரு மினிபஸ (Rosa/ Journey ரகம்) குறைந்தது 25 ஆசனங்களுடனும், ஒரு Hiace வானும் வாடகைக்கு தேவைப்படுகின்றது. தகுந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி 25.12.2005**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயல்திறன்அரங்க இயக்கம்,
"அருளகம்"
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(2141)


மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரே தின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு

காட்சிகள்

10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார்,தேவயானி நடித்த

மூவேந்தர்

காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)



# கட்சித் தலைமையில் மாற்றம்; ரணிலுக்கு இருவார அவகாசம்!

கொழும்பு—

ஐ.தே.கட்சியின் தலைமைப் பீடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான தமது முன்மொழிவுக்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேவையான பதிலெதுவும் வழங்காதுவிடின் தாம் சுயாதீனமான குழுவாக அல்லது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணையப்போவதாக ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அண்மையில் தமது இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக ஐ.தே.கட்சியின் மீள்கட்டுமானக் குழுவுடன் கலந்துரையாடலை நடத்தினர். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தக் குழுவில் மலிக் சமரவிக்கிரம, திஸ்ஸ அத்தநாயக்க, ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க மற்றும் ஹேமகுமார நாணயக்கார ஆகியோர் அங்கம் வகித்தனர்.

கரு ஜயசூரியவின் ஆதரவாளர்கள் சார்பில், காமினி லொக்குகே, ராஜித சேனாரத்ன மற்றும் ரஞ்சித் மதும பண்டார ஆகியோர் அங்கம் வகித்தனர். இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை ரணில் விக்கிரமசிங்க வெளியேறிச் சென்றதாகவும், அதன் பின் ஜி.எல். பீரிஸ் எவ்வித அழைப்புமின்றி இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட கரு ஜயசூரியவின் ஆதரவாளர்களில் ஒருவரான ராஜித சேனாரத்ன- மலிக்சமரவிக்கிரம மற்றும் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஆகியோர் மூலம் ரணில் விக்கிரமசிங்கவிற்கு விடுத்துள்ள செய்தியில் தமது முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் தம்மிடமுள்ள 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கரு ஜயசூரிய தலைமையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பது அல்லது சுயாதீனமாக இயங்குவது தொடர்பாக முடிவெடுக்கப்படுமெனத் தெரிவித்தனர்.

இவர்களது முன்மொழிவில் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும், பிரதித் தலைவராக எஸ்.பி. திஸநாயக்கவும், தேசிய அமைப்பாளராக ராஜித சேனாரத்னவும், எதிர்க்கட்சித் தலைவராக கருஜயசூரியவும் நியமிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர். எனினும், இவர்களது இந்த அச்சுறுத்தல் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க எந்த வித முடிவையும் எடுக்கவில்லை எனவும், மாறாக அவர் வேறொரு முன்மொழிவைத் தயாரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளுடன் மாவோ குழுவுக்கு எந்தவித தொடர்பும் இல்லை

## கிளர்ச்சிக்குழுத் தலைவர் தெரிவிப்பு

புதுடெல்கி—

விடுதலைப்புலிகளுக்கும், தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாதென இந்தியாவின் மாவோ கிளர்ச்சிவாதக் குழுவின் (சி.பி.ஐ.) தலைவர் தெரிவித்துள்ளதாக ஹிந்தி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது-

அண்மையில் பீகார் மாநிலத்தின் -மதுபான் கிராமத்தில் மேற்படி கிளர்ச்சிவாத குழுவின் தலைவரான நொம் டி கூரி ஆஷாத் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். இதன்போது அவர் தெரிவிக்கையில் -

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் எமக்கு பயிற்சிகள் தந்தனர். ஆனால், தற்போது அவர்களுடனான தொடர்பு எதுவும் எமக்கில்லை.

போர்த் தந்திரோபாயங்களை விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் மூலமாகவே நாம் கற்றறிந்து கொண்டோம். விடுதலைப்புலிகள் கண்ணிவெடிகளை உற்பத்தி செய்வது மற்றும் அதனைப் பயன்படுத்துவது குறித்தும் எமக்கு பயிற்சிகளை அளித்தனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் தமக்கு எந்த இடத்தில் பயிற்சிகளை அளித்தனர் என்பதைத் தெரிவிக்க அந்த அமைப்பின் மத்தியகுழு உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர்.

இதனிடையே தமக்கும், பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவிற்கும் எவ்வித தொடர்புமில்லையெனவும், ஆனால் நேபாள மாவோ கிளர்ச்சிவாதிகளுடன் நெருங்கிய தொடர்புஉள்ளதாகவும் ஆஷாத் தெரிவித்ததாக ஹிந்துப் பத்திரிகையின் செய்தி தெரிவித்துள்ளது.

# புலிகள் வசமுள்ள பொலிஸார் உயரதிகாரிகளுடன் தொடர்பு!

கொழும்பு—

விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள மூன்று பொலிஸாரும் கிளிநொச்சியிலிருந்து கொழும்பிலிருக்கும் தமது உயரதிகாரிகளுடன் உரையாடினர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போபட்டிகம, ஹேமந்த மற்றும் சரத் ஆகிய பொலிஸார் நீண்ட நேரமாக தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகப் பொலிஸ் சிறுவர் பாதுகாப்புப் பிரிவு இயக்குநரான சிசில் பெரேரா தெரிவித்தார்.

இந்த 3 பேரும் தங்களை விரைவில் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்குமாறு கேட்டதாகவும், தங்களின் குடும்பத்தவர்களின் சுகதுக்கங்களைப் பார்க்குமாறு கோரியதாகவும் அவர் கூறினார்.

இந்த மூவரையும் விடுவிக்க வேண்டுமாயின், பொலிஸ் காவலில் இருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவரை விடுவித்துக்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் முனைவதாகவும் பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

# ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு!

கொழும்பு—

ஐரோப்பிய ஒன்றிய ஆணைக் குழுவின் பிரதிநிதிகளுக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இடம்பெற்றது.

தற்போது நடைமுறையில் இருக்கும் சமாதான நிலைமை குறித்தும், எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில், ஐரோப்பிய ஒன்றியத் தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி - ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆசிய வலயப் பிரதிபணிப்பாளர் நாயகம் ஹாவிட் ஜோன்சன், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் குழுத்தலைவர் யூரியன் வெல்சன் ஆகியோரும், இலங்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச் சந்திரன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன் -

தற்போது ஏற்பட்டிருக்கின்ற அபாயகரமான சூழ்நிலைக்குரிய காரணங்கள் எதுவென தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் இலங்கையின் ஆட்சியாளர்களால் சமத்துவமாக நடத்தப்படவேண்டியதற்கு மாறாக நீண்டகாலமாக அநீதியான முறையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைவிடப்பட்ட பின்னர், கடந்த நான்கு வருடங்களாக அரசியல் ரீதியாகவோ, மனிதாபிமான ரீதியாகவோ தமிழ் மக்களுக்கு எதுவித நன்மைகளும் கிடைக்கவில்லை.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரணமான சூழ்நிலைகளால் சமாதான உடன்படிக்கை ஸ்திரமற்ற நிலையை அடைந்துவிட்டது போலவே இருக்கிறது. இந்த நிலைமையை தொடரவிடாமல் செய்யவேண்டும்.

இரு தரப்பினரையும் நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பாதைக்கு கொண்டுவர வேண்டியது ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய கடமையாகும் என வலியுறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கு வருமாறு ரணிலுக்கு அழைப்பு!

கொழும்பு—

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசின் அழைப்பையடுத்து புதுடெல்கிக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நான்கு நாள் பயணமாக எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தியாவிற்குச்சென்று திரும்பிய பின்னர் ரணில்விக்கிரமசிங்க இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கு முன்னர் -எதிர்வரும் திங்கட்கிழமை ரணில் விக்கிரமசிங்க பாங்கொங்கிற்குச் செல்லவுள்ளார். அதன் பின்னர் தனிப்பட்ட விஜயமாக அவர் வியட்னாம் செல்லவுள்ளாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரச்சினைகளை விரைவில் தீர்க்க பொதுமக்கள் இணைப்புப் பிரிவு!

கொழும்பு—

பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்காக பொதுமக்கள் விசேட இணைப்புப் பிரிவை ஏற்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் அனைத்து இணைப்புச் செயலாளர்களின் பங்களிப்புடன் அலரிமாளிகைக்கு அருகிலிருக்கும் கட்டடத்தில் இந்த இணைப்புப் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பிரிவினூடாக ஒவ்வொரு புதன்கிழமையிலும் பிரச்சினைக்கான தீர்வுகாணல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவின் முதலாவது நிகழ்ச்சி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# ட்ரக் விபத்தில் 10 படையினர் காயம்

பொலநறுவை—

வெலிகந்த-பூவத்தப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ட்ரக் ஒன்று பாதையைவிட்டு விலகி, விபத்துக்குள்ளானதில் பத்துப் படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் பொலநறுவை, வெலிகந்த மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில்இந்த விபத்து ஏற்பட்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஞ்சல் திணைக்கள அடையாள அட்டைகளுக்கு தடைவிதிப்பு!

கொழும்பு—

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் அனைத்துப் பரீட்சைகளிலும் - அஞ்சல் திணைக்கள அடையாள அட்டைகள் பயன்படுத்தப்படுவதை தடைசெய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தீர்மானித்துள்ளார்.

பரீட்சை மோசடிகளில் ஈடுபடும் விண்ணப்பதாரிகளில் பலர் அஞ்சல் அடையாள அட்டைகளில் மாற்றம் செய்து மோசடிகளில் ஈடுபடுவதே மேற்படி தடைக்கான காரணமாகும்.

# மூதூரில் சுமுக நிலை ஏற்படுத்த முஸ்லிம்கள் -புலிகள் இணக்கம்

திருகோணமலை—

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மூதூர் - சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பணிமனையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில்-

மூதூர் பள்ளிவாசல்களின் தலைவர்களுடனான சந்திப்பில் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணமும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் காலங்களில் ஒரு சுமுகமான நிலையை உருவாக்குவதற்கான வழிவகைகள் குறித்து கலந்துரையாடினோம்.

இறுதியாக எழுத்துமூலமான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது.

அந்த எழுத்து மூலமாக இருந்த ஆவணத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் கேணல் சொர்ணமும், பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின்சார்பில் மௌலவி ஷெரீனும் கையெழுத்திட்டனர்.

போக்குவரத்து வழமையான முறையில் இடம்பெற வேண்டும். எதிர்வரும் காலங்களில் இப்படியான சம்பவங்கள் ஏற்படும் நேரங்களில் இரு தரப்பும் சந்தித்துப் பேசி சுமுகநிலையை ஏற்படுத்தல். இரு இனங்களுக்கிடையில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் இருதரப்பினரும் சந்தித்து சுமுகநிலையைக் கொண்டு வருதல் ஆகிய தீர்மானங்களே எடுக்கப்பட்டன.



இலங்கை கடற்படையுடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள கொழும்பு வந்திருந்த இந்தியக் கடற்படையின் சுகன்யா கப்பலுக்குக் கூட்டுப்படைத் தளபதி தயாசந்தகிரி மற்றும் முப்படைத் தளபதிகளும் விஜயம் செய்தபோது இந்தியக் கடற்படை அதிகாரிகளுடன் எடுத்துக்கொண்ட படம். - படம்:- தமிழ் நெட்.

# ஜே.வி.பியின் குற்றச்சாட்டை ஜனாதிபதி நிராகரிப்பு!

கொழும்பு—


அமைச்சர் ஒருவர் 14 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொகுசு வாகனம் வாங்கியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்திருந்த குற்றச்சாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.



இது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையில்- அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வாங்கும்போது கொள்கை முடிவுகளைக் கடைப்பிடிக்குமாறு திறைசேரிக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை பேசிய ஜே.வி.பி. உறுப்பினர் நந்தன குணதிலக - உத்தியோகபூர்வ வாகனம் வாங்க அமைச்சர் ஒருவருக்கு 14 மில்லியன் ரூபாவை திறைசேரி ஒதுக்கியிருந்தது என சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் நெருக்கடியில் அவுஸ்ரேலிய அணி




சிட்னி —

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக பேர்த் நகரில் நேற்று ஆரம்பமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 258 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

லாங்கரும், ஹைடனும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஆனால், 2ஆவது பந்திலேயே ஓட்டமெதையும் பெறாமல் ஹைடன் வீழ்த்தப்பட்டார். என்ரினியின் பந்தில் இவர், ரூடொல்ப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.



அடுத்து லாங்கருடன், பொண்டிங் இணைந்தார். இவர்கள் நிதானமாக ஆடி ஸ்கோரை 111 வரை உயர்த்தினர். இந்த நிலையில் தொடக்க வீரர் லாங்கர் என்ரினியின் பந்தை சிமித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 89 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களை எடுத்தார்.



அடுத்து ஹொட்ஜ் களமிறங்க ஸ்கோர் 117ஆக இருந்தபோது - பொண்டிங்கை எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார் பொலக். இவர் 107 பந்துகளில் 12 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின் ஹூசே களமிறங்கினார். ஸ்கோர் 180 ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்த இவர், என்ரியின் பந்தை எதிர்கொண்டு, லாங்வெற்றிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்ப நேரிட்டது. இவர் 51 பந்துகளில் 23 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஸ்கோர் 185ஆக இருந்தபோது - என்ரினியின் பந்தில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஹொட்ஜ் ஆட்டமிழந்தார். இவர், 96 பந்துகளில் 41 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புடன் சைமன்ஸ் - கில்கிறிஸ்ட் ஜோடி இணைந்தது. ஆனாலும் அவர்களாலும் தென்னாபிரிக்க பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை. ஸ்கோர் 199அக இருந்தபோது, என்ரினியின் பந்தில் கிப்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த கில்கிறிஸ்ட் 13 பந்துகளில் 6 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

நெல்லின் பந்தில் 13 ஓட்டங்களுடன் சைமன்ஸ் போல்டானபோது ஸ்கோர் 210ஆக இருந்தது.

இந்தநிலையில் ஷேன் வோன் லீயுடன் இணைந்து ஆடத் தொடங்கினார். ஆனால், அவரும் ஸ்கோர்



243ஆக இருந்துபோது - லாங்வெற்றின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். 30 பந்துகளில் 24 ஓட்டங்களை இவர் எடுத்திருந்தார்.

இதன்பின் லீயுடன் இணைந்த பிறாக்கன் 10 ஓட்டங்களுடனும், மக்ரா ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் நெல்லின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர்.



இதனால் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 75.2 ஓவர்களில் 258 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. லீ 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

பந்துவீச்சில் என்ரினி 5, நெல் 3, பொலக், லாங்வெற் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த நிலையில் தொடர்ந்து ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி 7 ஓவர்களில் 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

டி-வில்லியர்ஸ் 14, சிமித் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

## விளையாட்டு



புதுடெல்கியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்ஸில் சதமடித்ததன் மூலம் 35 சதங்களை அடித்து உலக சாதனை படைத்த சச்சின் டெண்டுல்கர், தனது பிள்ளைகளுடன் சுற்றம் சூழ, 35 என வடிவமைக்கப்பட்ட கேக்கை வெட்டி கொண்டாடுவதைப் படத்தில் காணலாம்.

# கங்கூலியை நீக்கியதற்கு எதிராக மேற்கு வங்காளத்தில் ஆர்ப்பாட்டம்

புதுடெல்கி —

அகமதாபாத்தில் நாளை ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கங்கூலி நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கு வங்காளத்தில் அவரது ரசிகர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். மேற்கு வங்காள அரசியல் தலைவர்களும், நடிகர்கள், நடிகைகளும் கங்கூலிக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கங்கூலியின் நீக்கம் குறித்து பயிற்சியாளர் கிரேக் சப்பல் கருத்து வெளியிட்டபோது -

இந்தியா ஒரு பெரிய நாடு. மக்கள் கிரிக்கெட் மீது மிகவும் ஆர்வமாக உள்ளனர். எனவே அவ்வப்போது பிரச்சினைகள், குழப்பங்கள் வரத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாதது.




கங்கூலியின் நீக்கத்தில் எழுந்துள்ள பிரச்சினை பற்றி நான் எதையும் நேரடியாகக் கூற விரும்பவில்லை. எப்போதுமே ஒரு அணியில் சமனிலை நிலவ வேண்டும். அந்த வகையில் இப்போது சமனிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்ததாக, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக மோதவுள்ளோம். அதற்குத் தகுந்த மாதிரி அணியை அவ்வப்போது மாற்றி அமைப்பது அவசியமாகும்.




அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடும் தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும், சகலதுறை ஆட்டக்காரருமான கலிஸ் நேற்றைய போட்டியில் - காயம் காரணமாக விளையாடாதபோதும், சக வீரர்களுக்காக தண்ணீர் எடுத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

கும்ளேக்கு சில போட்டிகளில் வாய்ப்புக் கொடுக்கவில்லை. அவர் மீண்டும் திறமையாக உருவானதால் வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர் தனது திறமையை நிரூபித்துக் காட்டினார். பதானைப் பொறுத்தவரை அவரை சகலதுறை ஆட்டக்காரராக கருதுகிறோம். எனவே, அவருக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. நான் பயிற்சியாளராக வந்தபோதே இந்திய அணிக்கு சகலதுறை ஆட்டக்காரர் தேவை என்று கூறியிருந்தேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்வுக் குழுத் தலைவர் கிரண் மோரே இது குறித்து கூறுகையில் -

கங்கூலியை நீக்கியது வேண்டுமென்றே செய்ததல்ல. அரசியல் உள்நோக்கமோ, பழிவாங்கும் நடவடிக்கையோ எதுவும் இல்லை. இது கிரிக்கெட் தேர்வுக் குழு ஆய்வு செய்து எடுத்த முடிவு. யாரின் தலையீடும், வற்புறுத்தலும் இல்லாமல் தன்னிச்சையாக எடுத்த முடிவு. இது இறுதியான முடிவு, இதை மாற்றவும் முடியாது. கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார் இது பற்றி இதுவரை என்னிடம் எதுவும் பேசவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 100 மீற்றர் ஓட்ட சாதனையாளர் ரிம் மொன்ட்கொமரிக்கு தடை!

லசானே —

ஊக்கமருந்து பயன்படுத்திய விவகாரம் தொடர்பாக, அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் 100 மீற்றர் உலக சாதனையாளர் டிம் மொன்ட்கோமரிக்கு 2 ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதே குற்றத்துக்காக, 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற அமெரிக்க அணியில் இடம் பெற்ற வீராங்கனை கிறைஸ்ட் கெய்ன்ஸுக்கும் 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஊக்கமருந்து எதிர்ப்பு ஏஜென்சி அளித்த ஆதாரங்களை மையமாகக் கொண்டு, அவர்கள் மீது இந்த முடிவை விளையாட்டு வீரர்களுக்கான மத்தியஸ்த நீதிமன்றம் மேற்கொண்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள் விவகாரங்கள் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான உச்ச அளவிலான அதிகாரம் படைத்த விளையாட்டு நீதிமன்றம் லாசனேவில் அமைந்துள்ளது. அதில், இவர்கள் மீதான வழக்கு நடைபெற்றுவந்தது. விசாரணை




முடிவுகள் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு கூறப்பட்டது.

ஊக்கமருந்து குறித்து இவர்கள் இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அதற்கான ஆதாரம் இல்லையென தெரிந்தது. ஆனால், போல்கோ எனும் குற்றவியல் அமைப்பு அளித்த ஊக்கமருந்துக்கான ஆதாரங்களின் அடிப்படையில் வழக்கு நடைபெற்றுவந்தது.

அவர்கள் இருவருக்கும் 4 ஆண்டுகள் தடைவிதிக்க வேண்டுமென அந்த ஏஜென்சி வாதாடியது. ஆனால், நீதிமன்றம் அதில் பாதியளவிலான தண்டனையையே அவர்களுக்கு அளித்துள்ளது. இதையடுத்து, இந்த வழக்கு தொடங்கப்பட்ட 2005 ஜூன் 6ஆம் திகதி முதல் அவர்களுக்கான தடை அமுலுக்கு வரும்.

அதேசமயம், 2001 மார்ச் 31ஆம் திகதி முதல் மொன்ட்கோமரியில் பங்கேற்ற போட்டிகளின் முடிவுகள், பெற்ற பரிசுத் தொகைகள் ஆகியன செல்லாதவைகளாக கணக்கில் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, 2002ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் நிகழ்த்திய உலக சாதனையும் (9.79 வினாடிகள்) செல்லாததாகிறது. அவரது சாதனையை, ஜமெக்கா வீரர் அசஃபா பவல் கிரீஸில் (ஏதென்ஸ்) நடைபெற்ற போட்டியில் தகர்த்தது குறிப்பிடத்தக்கது. பவெல் 9.78 வினாடிகளில் 100 மீற்றர் தூரத்தைக் கடந்தார்.

# குரங்கும் தேன் குருவியும்



சோம்பேறிக் குரங்கொன்று மரக்கிளையின் மேல் ஓய்வாகப் படுத்துறங்க முயன்றது.


அச்சமயம் பலத்த காற்று குரங்கைத் தூக்கி எறிவதுபோல் தடுமாறச் செய்தது. மரக்கிளை குலுங்கி நடுங்கியது. உச்சிக் கிளைமேல் அமர்ந்திருந்த அது தன் கண்களைத் துடைத்துவிட்டு, சுற்றிலும் பார்த்துவிட்டு சற்றுத் திகைத்தது.



தொடர்ந்து மழை பொழியவும் அதற்குக் கடுங்குளிர் ஏற்படுவதை உணர்ந்தது.

குளிரிலிருந்து விடுபட்டு தன்னைச் சூடாக வைத்துக்கொள்ள எதையெதையோ சுற்றிலும் தேடியது. உடனே மின்மினிப் பூச்சிகள் கூட்டமாக வருவதைக் கண்டது. மின்மினிப் பூச்சிகளில் நெருப்பு இருக்கலாமென்றும், அது மிகச் சூடாக இருக்குமெனவும் நம்பியதால் அவற்றில் சிலவற்றைத் தன் கைக்குள் அடங்கக்கூடியளவு பிடித்தது.





அதேநேரம் அதே மரத்தின் அடிப்புறப் பொந்துக்குள் தங்கியிருந்த தேன்குருவி குரங்கின் செய்கைகளை அவதானித்துக் கொண்டிருந்ததால் அதைப்பார்த்துப் பரிகாசம் செய்தது.



"முட்டாள் குரங்கரே! எவரையும் சூடாக்கிக் கொள்வதற்கு மின்மினிப் பூச்சிகள் ஒருபோதும் உதவமுடியாதவை. மழைக் குளிரிலிருந்து பாதுகாப்பைத் தேடுவதானால் மரப்பொந்து இருக்குமிடம் நாடிப் போவதுதான் சரி. அங்கே போய்விடு" என்றது.



தேன் குருவியின் கூற்றைச் செவிமடுத்த குரங்கு, அந்தப் பூச்சிகளை வீசிவிட்டு குருவியைக் கோபத்தோடு பார்த்தது.

"அறிவற்ற முண்டமே! என்னை ஏன் முறைக்கிறாய்! போய் ஒரு மரப் பொந்தைத் தேடிக் கொள்" என மீண்டும் கேலி செய்தது.



குரங்குக்கு ஆத்திரம் அதிகரித்தது. குருவியிருந்த அடிமரப் பொந்துக்கே இறங்கி வந்தது. பொந்துக்குள்ளிருந்து குருவியை வெளியே இழுத்தெடுத்து, கைகளால் கசக்கவே குருவி வேதனையால் கத்தியது. "உனக்கு விரோதமாக ஒருபோதும் புத்திகூறவும், கேலி செய்யவும் மாட்டேன். தயவு செய்து என்னை விட்டுவிடு" என மன்றாடியது.





# துருவன்

## பாப்பா பாப்பா ஓடிவா!

பாப்பா பாப்பா ஓடிவா
பாலர்க ளுடனே கூடிவா
காப்பார் தன்னைச் சேர்ந்துவா
காலமும் உன்னை நினைந்துவா!

காக்கா காக்கா கரைந்துவா
காலையில் துயிலை நீக்கிவா
கூக்கூ குயிலே கூவிவா
குலவும் இனிமை சேர்த்துவா!

தமிழே தமிழே வளர்ந்துவா
தரணியில் இன்பம் கலந்துவா
தூமியாய் தூமியாய் தூறிவா
துயில்கொண் டோரைத் தட்டிவா!

மயிலே மயிலே ஆடிவா
மழையும் பெய்ய வேண்டிவா
வெயிலே வெயிலே விரைந்துவா
வேண்டும் மழையே பொழிந்துவா!

கனியே கனியே கனிந்துவா
கலந்து இனிமை நிறையத்தா
இனிய நெஞ்சம் போன்றுவா
இழிவுகள் எம்மில் நீக்கிவா!

-தேவி பரமலிங்கம்.

## கல்விச் சாலைகள் அமைத்திடுவோம்

சின்ன வயதினில் சிறுவர்கள் நாம்
சீரிய வாழ்வைத் தெரிந்திடுவோம்
சிறந்த பழக்க வழக்கங்கள்
நிறைந்த வாழ்வைத் தேடிடுவோம்.

பெரியோர் காட்டிய வழிகளையே
தெரிந்து நடந்திடப் பழகிடுவோம்
நாட்டைக் காத்திடப் பட்டதுயர்
கதைகளை யெல்லாம் படித்திடுவோம்.

கல்விச் சாலைகள் அமைத்திடுவோம்
கற்றிடும் வாய்ப்பைப் பெற்றிடுவோம்
கற்றவர் எங்கள் நாட்டினிலே
நிறைந்திடச் செய்து மகிழ்ந்திடுவோம்.

-கிருபா.



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................. ..................
திகதி ஒப்பம்

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் :- நாகராஜா நந்தகோபன்
தரம் :- 08
பாடசாலை :- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வி கற்றல், விளையாட்டு.

பெயர் :- ஜேசுதாசன் நிஷாந்தன்
தரம் :- 09
பாடசாலை :- யா/பத்திரிசியார் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கிரிக்கெட் விளையாடுதல்.

பெயர் :- ஞானசிலன் ஞானறொபின்சன்
தரம் :- 07
பாடசாலை :- யா/கலட்டி றோ.க.த.ஆண்கள் பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- வாசித்தல், சித்திரம் வரைதல் விளையாட்டு.

பெயர் :- கலிஸ்ரா.ஜெ
தரம் :- 07
பாடசாலை :- யா/சென்சாள்ஸ் மகா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், விளையாடுதல்.

பெயர் :- ஜெ.சுஜீவன்
தரம் :- 09
பாடசாலை :- யா/சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், T.V பார்த்தல்.

# தீக்கோழி

உலகின் மிகப் பெரிய பறவையான தீக்கோழி பறக்கமுடியாத இன வகையைச் சேர்ந்தது. இளம் கறுப்பும், நீலம் மற்றும் சிவந்த நிறங்களுடன் கூடிய இவை மூன்று வகையானவை. வலுவான இரு கால்களுள்ள இந்தப் பறவையின்



உதைக்கு வயது வந்த எவரும் இறக்க நேரிடும். ஏறக்குறைய 70 வருடங்கள் இதன் ஆயுட்காலம். வயதில் மூத்த பறவைகள் 160 கிலோ நிறையுடையவை. மணிக்கு 70 மைல் தூரத்தை வேகமாக ஓடிக் கடக்கவல்லவை. தீக்கோழி உயரத்திலும் மற்றைய பறவைகளை விட முன்னணியிலுள்ளது. 9 அடி வரையிலும் வளருகின்றது. 25 கோழி முட்டைகளின் நிறைக்குச் சமமான இதன் முட்டை மிகப் பெரியது. பெண்தீக்கோழி வருடமொன்றுக்கு 50 முட்டைகளுக்கு மேல் இடுகிறது. பொரிக்கும் குஞ்சுகள் மாதத்துக்கு 1 அடி வீதம் வளரும். வியத்தகு விடயமாக இருப்பது இதன் மூளை, இதன் கண்களைவிடச் சிறியவையாகவும், மூன்று கண் மடல்களையும், இரண்டு கால் விரல்களையும், ஒரு விரல் நகத்தையும் கொண்டிருப்பதாகும். பூச்சிகள், சிறு பிராணிகள், தாவரங்களை உணவாகக் கொள்ளும் இவை - சில வேளைகளில் கடினமான கற்களையும் ஜீரணிக்கும் தேவைக்காக உட்கொள்கின்றன. குடலிலிருக்கும் இரையை அரைத்துச் சீரணிக்கச் செய்கின்றதாம் இந்தக் கற்கள். ஆபிரிக்கர்கள் தீக்கோழியை பந்தய ஓட்டப் போட்டிகளுக்கும் பயன்படுத்துகின்றனர்.



# மாய மாளிகை

முன்னொரு காலத்தில் உயர்ந்த மலைப் பாங்கான இடத்தில் மந்திரவித்தை கைதேர்ந்த அரசன் ஒருவன் இருந்தான். அவன் பெரிய மாயாஜால வித்தைகளைக் காண்பித்தும், மக்களின் இரக்க சிந்தையுள்ளவராகவும் இருந்ததால் மக்கள் அவரில் அன்பாக இருந்தனர். அவர்கள் அரசனுக்காகக் கடுமையாக உழைத்து மலைகளுக் கிடையிலிருந்த, மறைத்து வைக்கப்பட்ட பொக்கிஷங்களை மீட்டெடுப்பதற்கு உதவினார்கள். அரசனுக்குப் பெரிய தாடி இருந்தது. அவன் நிற்கும்போது தரையில் தொடுமளவுக்கு நீண்டிருந்தது. காலங்கள் பல கடந்தன. அரசன் மற்றைய இராச்சியத்து மன்னர்களை விடவும் மிகுந்த செல்வந்தனாக விளங்கினான்.


தனது செல்வங்களையெல்லாம் சேமித்து வைப்பதற்காக கோட்டை மாளிகை ஒன்றைக் கட்டுவதற்கும் தீர்மானித்தான். தன் மந்திர வித்தையை உபயோகித்து உலகெங்குமில்லாத முறையில் மைந்த அழகான கோட்டையை மந்திரத்தால் உருவாக்கினான். கோட்டைச் சுவர்களை வெள்ளியாலும், அறைகளை விலை மதிப்புள்ள இரத்தினக் கற்களாலும் அலங்காரமாக அமைத்தான். பகல் வேளைகள் மிகப் பிரகாசமாக இருந்ததால் மக்கள் அதைப் பார்க்க ஆவல் கொண்டனர். உட்புறத்தில் வரும் முழுவதும் காய்க்கும் பழ மரங்களும் இருந்தன. மந்திரத்தாலான இந்தக் கோட்டை இராச்சியம் மகிழ்வுடன் நடைபெற்று வந்தது.

இந்தக் கோட்டை விடயத்தில் எல்லோரும் அதிருப்தி கொண்டிருந்தனர். அண்டை இராச்சியங்களும் அதன் அரசர்களும் வெள்ளிக் கோட்டை மீது பொறாமையும், பகைமையும் கொண்டிருந்தனர். ஒரு துஷ்ட குணமுள்ள அரசன் அக்கோட்டை மீது படையெடுத்து அழித்துவிட எண்ணினான். மந்திரவித்தைக்கார அரசனைப் பிடிக்கவும், கோட்டையைக் கைப்பற்றவும் விரும்பிய அந்த அரசன் பெரும் படையுடன் சென்றான். தாடி அரசனிடம் படைகள் இருக்கவில்லை. தன் மக்கள் பாதிப்படைய நேரிடுமென்பதால் எவருடனும் போருக்குப் போகவும் விரும்பாதவன். இப்போது மந்திரவாதி மன்னன் பிடிபட்டான். நாட்டு மக்களுக்கு எவ்வித கெடுதலும் நேரவில்லை. இருந்தும் அவர்கள் கோட்டையைத் தாக்க முற்பட்ட போது, அது திடீரென மறைந்தது. உண்மையில் அதற்கு என்ன நடந்தது என்பதில் படையினர் குழப்பமும், திகைப்பும் அடைந்தார்கள். எவரேனும் கோட்டையை அழிக்க முடியாதவாறு அக்கோட்டை மீது அரசன் சாபமிட்டிருந்தான். அதை மீளக் கொண்டு வரவேண்டுமானாலும் அவனால்தான் முடியும். அந்த அரசனும் சிறையில் இறந்தான். எனவே அதை மீளப் பெறுவதென்பது முடியாத காரியமாக இருந்தது. அரசன் இறந்தமையால் எங்கும் விபரீதங்கள் ஏற்படலாயின. அந்தக் கோட்டை உலகின் பல்வேறு இடங்களிலெல்லாம் திடீர் திடீரென்று தோற்றமளித்து வந்தது. அதற்கு யாராவது தீங்கிழைக்க விரையும் போதெல்லாம் அது மெல்லிய காற்றாக மறைந்து கொண்டேபோனது.

அநேக நூற்றாண்டுகளின் பின்னர் அங்கே விவசாயிகள் கிராமமொன்றிருந்தது. அவர்கள் நாணயமான கடும் உழைப்பாளிகள். அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தும் எவர் பொருளிலும் பேராசை கொள்ளாமலும், திருடாமலும் கண்ணியமாக வாழ்ந்து அக்கிராமத்தைச் சமாதான பூமியாக ஆக்கியிருந்தனர். ஒருநாள் காலை வேளை விவசாயியொருவர் தன் வயலுக்குகில் ஏதோ பிரகாசித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். இது என்னவாக இருக்கலாமென்பதைக் கண்டறிவதில் அவர் மிக ஆவலாயிருந்தார். அதனருகில் சென்றதும் அது ஒரு கோட்டை மாளிகை என்பதைக் கண்டு கொண்டார். சுவர்கள் வெள்ளியாலும், அறைகள் பெறுமதியான கற்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததையும் கண்டார். அது போன்ற தொரு கோட்டையை வேறெங்கும் அவர் கண்டதில்லை. கிராமத் தலைவரிடம் சென்று இந்த அழகான கோட்டையைப் பற்றிக் கூறுவதற்கு ஓடினார். கிராமத் தலைவரும் இதைக் கேட்டவுடன் பார்ப்பதற்கு தனது சில ஆட்களுடன் அவ்விடம் நோக்கி விரைந்தனர். அனைவரும் அதைக் கட்டி முடித்தது யாரென்று தெரியாமல் வியப்படைந்து நின்றிருந்தனர்.

அதை ஒரு கெட்ட சகுனமாகவும், ஏதோ விபரீதம் நடக்கப் போவதாகவும் நம்பிய கிராமத்தவர் கோட்டைக்குள் செல்ல அநேக நாட்களாக அஞ்சினார்கள். ஆனாலும் பின்னர் மெதுமெதுவாக உள்ளே சென்று பார்வையிட்டதன் பலப்படியாக அதனுடன் பரிச்சயமானார்கள். தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த இரத்தினக்கற்கள் போன்றவை பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள். தமக்குத் தேவைப் படுவதைத் தவிர்ந்த வேறெதையும் அவர்கள் எடுக்காதிருந்தனர். அவற்றுடன் புதிய செம்மறியாட்டையும், கால்நடைகளையும் கொண்டு வந்தனர். ஆனால் அக்கிராமத்தலைவனோ, தானே அவை எல்லாவற்றையும் அபகரிக்க வேண்டுமெனப் பேராசை கொண்டான்.

இந்த மர்மமான கோட்டை பற்றிய விடயம் அந்த இராச்சியம் முழுவதிலும் பரவியது. அந்த அரசனும் அதைப் பார்க்க விரும்பினான். மாற்றான் அரசனொருவனால் கட்டப்பட்ட கோட்டை என நம்பிய அந்த அரசனும் அதைக் கைப்பற்ற எண்ணினான். அதற்காக ஆயுதந்தரித்த பெரும் படையுடன் சென்றான். கிராமத்துக்கு அரசன் வந்து கொண்டிருக்கும் செய்தியை கிராமத் தலைவன் கேள்



வியுற்றான். எனினும் பொக்கிஷங்களை அபகரிக்கும் தன் எண்ணத்தை அவன் கைவிடவில்லை. கதவுகள் எல்லாவற்றையும் மூடி விட்டு உள்ளே இருந்தான். கிராமத்தவர்கள் அரசனைக் கோட்டைக்கு அழைத்து வந்தனர். இத்தகைய பளிச்சிடும் அழகான கோட்டை யாரால் கட்டியெழுப்ப முடிந்தது என்பதில் ஆச்சரியமடைந்தான். கோட்டை மிகப் பாதுகாப்பானதாகவும் இருந்ததால் உட்புறத்தையும் பார்க்க விரும்பினான். ஆனால் கோட்டையின் அறைக் கதவுகள் உட்புறம் பூட்டப்பட்டிருந்ததைக் காவலர் நினைவூட்டினர். அவைகளைத் தாக்கி உடைத்துத் திறக்குமாறு அவன் உத்தரவிட்டான்.

ஆனால் அவர்கள் தாக்க ஆரம்பித்ததுதான் தாமதம் அந்தச் சாபம் திரும்பவும் வேலை செய்தது. இருந்த இடம் தெரியாமல் அந்த கோட்டை மறைந்து போனது. கிராமத்தலைவன் கோட்டையுடன் கொண்டு செல்லப்படாமல் நடு வயலில் தனியாக விடப்பட்டான். ராணுவ வீரர்கள் சுலபமாக அடையாளம் கண்டு பிடித்துக் கொண்டனர். அரசன் தன் அரண்மனைக்குத் திரும்பினான். கிராமத் தலைவன் சிறை வைக்கப்பட்டான். கோட்டையின் திடீர் மறைவு கூட நாடெங்கும் பரவியது. பல வருடங்களின் பின்னர் வருங்கால சந்ததியினருக்கு இந்த மாயமாய் மறையும் கோட்டை பற்றிய கதைகளை பெரியோர்கள் எடுத்துரைப்பார்கள்.

அந்தக் கோட்டையைப் பொறுத்தவரை, காருண்ய சிந்தை படைத்தவர்கள் எங்குள்ளனரோ அங்கெல்லாம் தோன்றுவதும் மறைவதுமாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

# உங்களுக்குத் தெரியுமா?

- யானை தனது துதிக்கையால் 2 கலன் தண்ணீரை ஒரே தடவையில் எடுக்கக்கூடியது.
- பெண் காண்டாமிருகம் கருத்தரித்திருக்கும் காலம் 560 நாட்களாகும்.
- கோழியின் நடுத்தர அளவுடைய 'கிவி' என்ற சிறிய பறவை நியூசிலாந்து நாட்டில் அதிகமாகக் காணப்படுவதால் நியூசிலாந்து நாட்டுக்காரர்களை - குறிப்பாக சிறிக்கெட் ஆட்டக்காரரை 'கிவிஸ்' என அழைக்கின்றனர்.
- 'டெட் சீ' (Dead Sea) என்பது உண்மையில் ஒரு கடலல்ல. அது ஒரு நீரேரி. 45 மைல் நீளம், 10 மைல் அகலமுள்ள இதன் நீர் உப்புத்தன்மை மிகுந்தது. எவராயும் நீருக்குள் சுலபமாக மூழ்கமுடியாது. உலகில் மிகக்குறைந்த உப்புத்தன்மை கொண்ட கடல் பால்டிக் கடல்.
- சிபடத்தட பூமியில் வாழும் அரைவாசி மக்களும் பூமியின் மொத்த நிலப்பரப்பின் மூப்பதில் ஒரு பங்கு நிலப்பரப்பில் வாழ்கின்றனர்.
- சமுத்திரத்தின் மிக ஆழமான பகுதியில் நீரின் அமுக்கம் மிக அதிகம். கண்ணாடிப் போத்தலொன்றை மேலிருந்து கீழே போட்டு அது அடிப்பாகத்தை அடையமுன் வெடித்துச் சிதறிவிடும்.

# நாய்க்குள்ளைக் குறித்து உணர்த்துபவை



நாய் எம்முடன் நட்புடனிருந் தால் தன் வாலை மேல்நோக்கி உயர்த்தி ஆட்ட ஆரம்பிக்கும்.



தன்னை யாராவது அச்சுறுத்துவதாக உணர்ந்தால் தன் வாலை மேலாக உயர்த்தி விறைப்பாக வைத்துக்கொள்ளும்.



அடங்கிப் பணிந்துபோகும் தன்மையிலிருந்தால் பின்னால் கால்கள் இரண்டுக்குமிடையில் தன் வாலைச் சுருட்டிவிடும்.

# அறிந்துகொள்ள...

- ஆகக்குறைந்த சனத்தொகை கொண்ட நாடு வத்திக்கான்
- வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர் ஆல்பிரட் நோபல்
- ஆகக்குறைந்த சனத்தொகை நாடு அவுஸ்ரேலியா
- கடைசியாக கண்டறிந்த கிரகம் புளூட்டோ
- இனதும் தன்மைகொண்ட உலோகம் தங்கம்.

கு.சபேசன்
தரம் - 07
யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்

# பிராணிகள் தொடர்பான பழமொழிகள்

- எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.
- சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.
- பசுத்தோல் போர்த்திய புலி.
- குரங்கின் கையில் பூமாலை.
- ஆனைக்கும் அடிசறுக்கும்.
- தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்.
- புலி பசித்தாலும் புல் தின்னாது.
- இளங்கன்று பயமறியாது.

ம.சிவகெளரி, தரம் - 07
யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

# சிந்தனைத் துளிகள்

- எதிர்காலம் என்பது நாங்கள் சொல்லும் இடமல்ல. மாறாக நாங்கள் அதனை உருவாக்குகின்றோம். அதற்கான வழிகள் கண்டுபிடிப்படுவதில்லை. மாறாக உருவாக்கப்படுகின்றன. அத்தகைய வழிகளை உருவாக்குவது உருவாக்குபவரையும், சென்றடையும் இடத்தையும் மாற்றியமைக்கின்றது.
- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமை அல்ல. விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
- அதிர்ஷ்டம் உனக்கு சட்டியைத் தேடித் தரலாம். ஆனால் சட்டியில் உலையைப் போடுவது உன் உழைப்பைப் பொறுத்தது.
- உண்மையைச் சொல்லி நன்மை செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும் - நிலை உயரும்போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்.

ச.அசோக்குமாரா, தரம் - 11
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# சுருக்கப் பெயருள்ள நிறுவனங்கள்


- UNO - United Nations Organization.
  ஐக்கிய நாடுகள் சபை.
- WTO - World Trade Organization.
  உலக வர்த்தக நிலையம்.
- BBC - British Broadcasting Co - operation.
  பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.
- VOA - Voice Of America.
  அமெரிக்க ஒலிபரப்புச் சேவை.
- PLO - Palastina Liberation Organization.
  பாலஸ்தீன விடுதலை இயக்கம்.
- NGO - Non Goverment Organization.
  அரசசார்பற்ற நிறுவனம்.
- IOC - International Olympic Commitee.
  சர்வதேச ஒலிம்பிக் குழு.
- SLBC - Sri Lanka Broadcasting Co - operation.
  இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

ச.அசோக்குமாரா, தரம் - 11
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி







# உங்கள் கைவண்ணம்



அ.மக்லின், தரம் - 07
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.




ம.மரியதன், தரம் - 04
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.



சி.சிவாஜினி, தரம் - 02
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.



ஞா.அனுஜா, தரம் - 05
யா/சென் தோமஸ் றோ.க.த.க.பாடசாலை.



ஞா.ஞானறொபின்சன், தரம் - 07
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.



க.நிசாந்தன், தரம் - 05
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை.



பு.சுமித்திரா, தரம் - 10
யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்.



அ.மக்லின், தரம் - 07
யா/க.றோ.க.த.க.ஆ. பாடசாலை.



அ.தயானி, தரம் - 03
யா/சென்தோமஸ் பெண்கள் பாடசாலை.

# அரசனைச் சந்தித்த அரசன்



காடொன்றில் மிருகங்களும், பறவைகளும் சமாதான மான முறையில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவ் வேளையில் வேறொரு காட்டிலிருந்து சண்முகா என்ற



சிங்கம் அங்கு வந்துசேர்ந்தது.

அந்தக் காட்டின் அரசனாகத் தன்னையே பிரகடனம் செய்துகொண்டது மட்டுமல்லாமல், காடு முழுவதிலும் தன்னிஷ்டப்படி அலைந்துதிரிந்து மிருகங்களை வேட்டையாட ஆரம்பித்தது. ஆனால் எல்லா மிருகங்



களையும் கொல்ல முடியவில்லை.

ஒருநாள் மிருகங்களெல்லாம் சண்முகாவைச் சந்தித்து, "மேன்மைதங்கிய மகாராஜாவே! தாங்கள் காட்டிலுள்ள விலங்குகளையெல்லாம் பலாத்காரமாகக் கொன்று, அதன் தொகையைக் குறைத்துவிட்டிருக்கிறீர்கள். இந்த வகையில் போனால், விரைவிலேயே காட்டில் மிருகங்களே இல்லாமற்போய்விடும்



சாத்தியமுள்ளது. அதன் காரணமாக உங்களுக்கான உணவுகளே அற்றுப் போய்விடலாம்" என்று கூறின.


அடக் கடவுளே! இப்போது நான் என்னதான் செய வது? என்று கேட்டது சண்முகா. அதற்கு விலங்குகளுக்குத் தலைமை தாங்கியவர் கூறினார் – "நீங்கள் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. எங்களில் ஒரு நாளைக்கு ஒருவர் என்ற வீதத்தில் உங்கள் முன் தரிசனம் கொடுப்பார்கள். அப்படியாக உங்கள் உணவுத் தேவை நிறைவேற்றப்படும்."





முதலாம் நாள் எருமையின் முறை வந்தது. தன் முயற்சியின்றியே அருமையான உணவு கிடைத்ததையிட்டு காட்டரசன் மகிழ்ந்தார். அடுத்தநாள் மான் சென்றது. மூன்றாம் நாளன்று ரேணு என்ற முயலின் முறையாகும்.

ரேணு தன்னைச் சிங்கத்திடம் அர்ப்பணிக்க விரும்பவில்லை. அதனிடமிருந்து தப்புவதற்குச் சிறந்த திட்டமொன்றைத் தீட்டியது. வந்தது ஒரு அற்ப பிராணி என்பதாலும், தனக்கான இரை தாமதமாக வந்ததாலும், மிகுந்த ஆத்திரமடைந்தது சண்முகா. அதைக்கண்ட ரேணு "ஐயா உண்மையில் சகோதரர்கள் நால் வரும் உங்களிடம் வரும் வழியில் உங்கள் அரசனால் உணவாக்கப்பட்டுவிட்டார்கள்" என்றது.





"எனது அரசனா? என்ன பைத்தியக்காரத் தனமான பேச்சுப் பேசுகிறாய்? அந்த இடத்துக்கு அவனிடம் என்னைக் கூட்டிக்கொண்டுபோ" என உறுமியது. ரேணு ஒரு பாரிய கிணற்றண்டைக்கு சிங்கத்தை அழைத்துச் சென்றது. கிணற்றைச் சுட்டிக்காட்டியது ரேணு. "அந்த அரசன் உள்ளிருக்கும் தனது கோட்டையில் இருப்பதால் அங்கேயே சென்று நீங்கள் சந்திக்கலாம்" என்றது.

சண்முகா கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. அதன் உருவம் தண்ணீரில் பிரதிபலித்ததைக் கண்டு, பெரிதாகக் கர்ச்சித்துக்கொண்டு கிணற்றுக்குள் பாய்ந்தது. அதனால் கிணற்றுச் சுவரைத் தாண்டி மேலே ஏறி வரமுடியவில்லை. தப்புவதற்கு எந்த வழிகளுமில்லாததால் இறந்தது. ரேணுவின் புத்திசாலித்தனத்தை மெச்சிய எல்லா விலங்குகளும் அதற்கு நன்றி கூறின.



நமது ஈழநாடு

வைர வரிகள்

தமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்;
எமது இனத்தின் ஆன்மா.
- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நமது நோக்கு

# ஆறுமுகன் தொண்டமானின் ஆக்கபூர்வமான கருத்து...!

தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையையும், தமிழர் சமூகத்தின் பாதுகாப்பையும் சிதறடிக்க நினைக்கும் சக்திகளின் சதி நடவடிக்கைகளுக்கும் - அதில் ஈடுபடுவோருக்கும் எதிராகச் செயற்பட முடிவுசெய்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளமையானது- காலதாமதமாகி எடுத்த முடிவாக இருந்தாலும் காலத்தின் தேவையை உணர்ந்து எடுத்த முடிவாக அதனைக் கருதலாம்.

மலையக மக்களின் ஏகோபித்த செல்வாக்குமிக்க கட்சியாக இ.தொ.காங்கிரஸ் கட்சியும், அதன் பெருந்தலைவராக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் விளங்கிய 1990 கள் வரையிலான காலப்பகுதியில் தென்பகுதியில் எந்த ஆளும்கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்றாலும் அந்தக் கட்சி அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள தீவிரம் காட்டுவதும், ஆளும்கட்சியுடன் பேரம்பேசி மலையக தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களை வளம்படுத்தி நிர்வகிக்கும் பொறுப்பு மிக்க அமைச்சை தம்வசப்படுத்தி அவ்வரசுடன் இணைந்து செயற்படுவதும் ஒரு வழமையான கலாசாரமாகவே அரசியலில் இருந்துவந்தது.

ஆளும்கட்சியுடன் இணங்கிப்போக ஒவ்வொரு முறையும் மாறமாறி முடிவுகளை எடுக்கும் அவரது அரசியல் கொள்கை கடுமையாக விமர்சிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட - அவர் அதற்குக் கூறிய காரணங்கள் அவரை நியாயப்படுத்துவதாக இருந்தாலும் கூட - அவர் அவற்றைப்பற்றி அக்கறைகொண்ட ஒருவராக இருந்தது கிடையாது.

அது, அவரது பலவீனமா? அல்லது பலமா? என்பது காலங் கடந்த விவாதப் பொருளேயாகும்.

எப்படியோ அவரது காலம் முழுவதும் மலையக மக்கள் அவரைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டார்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

தென்பகுதி பேரினவாத தலைமைகள் அவரோடும், அவர் அத்தலைமைகளோடும் சமரசம் செய்துகொள்பவராக இருந்தாலும் கூட அந்தச் சமரசம் வெறும் அரசியல் உள்நோக்கங்களுடனான சமரசமேயன்றி ஆத்மார்த்தமான கொள்கைகளின் அடிப்படையிலான சமரசம் என்று கருதமுடியாது.

இதற்குக் காரணம் மலையக மக்களை இந்த நாட்டின் சகல உரிமைகளையும்கொண்ட, சம அந்தஸ்துகொண்ட பிரஜைகளாக தென்பகுதி சிங்களத் தலைமைகள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டது கிடையாது என்பதேயாகும்.

தொண்டமான் அவர்களைத் தவிர்க்கவேமுடியாத - தமது அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டிய தேவையான ஒரு சக்தியாகவே சிங்களத் தலைமைகள் கருதின. அவ்வளவுதான்.

அதேவேளை, இ.தொ.கா.என்ற வலுவான மக்கள் செல்வாக்குமிக்க கட்சியை உடைத்துப் பலவீனமாக்க சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அரசியல் சதிகள் ஏராளம்.

இன்று இ.தொ.கா. பல கூறுகளாகப் பிரிந்துபோகும் வகையில் மித்திரபேத ராஜதந்திரத்தைக் கையாண்ட சிங்களத் தலைமைகளின் அரசியல் உத்திகளை மலையகத் தலைமைகள் புரிந்துகொண்டும் - அதிகார அனுகூலங்களுக்காக அதனைப் புறக்கணித்ததன் விளைவை இப்போது அனுபவிக்கின்றார்கள் என்றே கூறவேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பேரினவாத சக்திகளின் ஒன்றுகூடலை அடையாளப்படுத்தியுள்ளதுடன் - இது எதிர்காலத்தில் சிறுபான்மை சமூகத்தவர்க்கு அதாவது - தமிழ் பேசும மலையக, இஸ்லாமிய மற்றும் வடக்கு - கிழக்கு வாழ் மக்களுக்கு - ஒரு அச்சுறுத்தலாகவும் உருவாகியுள்ளது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பமான காலத்தில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடையே இருந்த தமிழர் என்கிற ஒருமைப்பாட்டுணர்வை சிதைப்பது தமது அரசியல் எதிர்காலத்துக்கு அவசியம் என உணர்ந்த சிங்களத் தலைமைகள் அவர்களிடையே உடைவுகளை - முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் அரசியல் மூலோபாயங்களை வகுத்து செயற்பட்டதன் எதிரொலி, எப்படியான நெருக்கடிகளை உண்டுபண்ணப்போகிறது என்பதை உணராத தமிழ், மலையக, இஸ்லாமிய மிதவாத அரசியல் தலைமைகள் அரசியல் நீரோட்டத்தோடு அடித்துச் செல்லப்பட்டதன் விளைவு...!

மலையக மக்கள் பல தலைமைகளுக்குள் துண்டுதுண்டாகக் கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் தலைமைகள் பல கூறாகி தங்களுக்குள்ளேயே முரண்பட்டு நிற்கின்றனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கிலும் சில தமிழ்க் குழுக்கள் அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டிருந்தாலும், மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் பின்னால் எழுச்சிகொண்டு அணிதிரண்டுள்ளதே அரசுக்கு தீராத தொல்லையாக உள்ளது.

முன்னர் ஒரு தடவை இ.தொ.காவின் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், தந்தை செல்வா மற்றும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோருடன் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய அணியாகச் செயற்படமுன்வந்த சம்பவம் நினைவுக்கு வரவே செய்கிறது.


சிங்களப் பேரினவாதிகள் ஓரணியில் நிற்கும்போதும் தமிழ் பேசும அனைத்துத் தரப்பினரும் தமிழர்கள், முஸ்லிம்கள் , மலையகத்தவர்கள் என இன, மத, பிராந்திய உணர்வுகளைக் களைந்துவிட்டு ஓரணயில் நின்று தமது அரசியல் வாழ்வியல் உரிமைகளை வென்றெடுக்கவேண்டிய வரலாற்றுக் கட்டம் உருவாகியுள்ளது.

ஆறுமுகன் தொண்டமான் அதனை உணர்ந்துள்ளார் என்பது தெரிகிறது.

வன்னிக்கான அவரது வருகை ஆக்கபூர்வமான ஒன்றாக அமையுமென எதிர்பார்ப்போமாக...

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# பொருளாதார தடைவிதிப்பு காலத்தில் மக்களைக் காத்தவர்கள் விவசாயிகளே

## பொருண்மிய பொறுப்பாளர் கரிகாலன்



எமது தேசியத் தலைவருக்குப் போர்க் காலத்தில் விவசாயிகள் பக்க பலமாக நின்றார்கள் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி விவசாய உதவிப் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆண்டுதோறும் விவசாயிகள் கௌரவிக்கப்படுகின்றார்கள். விவசாயத்தை சிறப்பாக மேற்கொண்டு வெற்றி கண்ட விவசாயிகள் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

விவசாயத்தைச் சிறப்பாக மேற்கொண்ட விவசாயிகளின் செயன்முறைகள் விரிவாக்கப்பட்டால்தான் விவசாயத்துறை எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடையும்.

எமது தாயகம் விவசாயத்தைக் கூடுதலாகச் செய்கின்ற பிரதேசங்களைக்கொண்டது.

மிகப்பெரிய யுத்தங்களை எதிர்கொண்டு, கடுமையான பொருளாதாரத் தடையைச் சந்தித்து, பெரியளவிலாக இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாத்த விவசாயிகள் இந்த மண்ணிலே உள்ளார்கள்.

ஐந்து லட்சம் மக்கள் ஒரே இரவில் இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்துக்கு வந்தார்கள். அந்த மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்து, கொடிய போரை எதிர்கொண்டு, மிகப்பெரிய வெற்றியீட்டுவதற்கு எமது தேசியத் தலைவருக்கு பக்கபலமாக நின்று செயற்பட்ட ஒவ்வொரு விவசாயிகளும் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

தமிழீழ மக்கள் அனைவராலும் நினைவில் கொள்ளவேண்டியவர்களாக விவசாயிகள் உள்ளனர்.

விவசாயிகள் சந்திக்கின்ற துயர்கள் சொல்லில் அடங்காதவை. தங்கள் உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாது, மீண்டும் தமது விவசாய முயற்சிகளைத் தொடரமுடியாது திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே திட்டமிட்ட விவசாயச் செய்கைமுறை இன்று அவசியமாகவுள்ளது. விவசாயச்செய்கை முறையை ஒழுங்குபடுத்தவேண்டும்.

விவசாயிகள் விற்பனை செய்யக் கூடிய, மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய விவசாய முறைக்கு மாறவேண்டும்.

இதைவிடுத்து, நெல்லை மட்டுமே உற்பத்தி செய்துகொண்டிருப் போமானால் தொடர்ந்தும் இடர்களையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

கடந்தகால சிறுபோகத்தில் பல விவசாயிகள் தானியச் செய்கையில் ஈடுபட்டு, பெருமளவு உற்பத்தியை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளனர். பெறுமதிகூடிய விவசாய உற்பத்திப் பொருட்களையே உற்பத்தி செய்ய வேண்டும்.

அப்போதுதான் விற்பனையிலும் வெற்றிகண்டு மக்களின் போசாக்கு உணவுத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ளலாம். எங்கள் மக்களுக்குப் பயன்தரக்கூடிய பயிர்களை நாம் உற்பத்தி செய்யத் தயாராக வேண்டும்.

விவசாயத் துறையில் புதிய செயன்முறைகளும், நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படவேண்டும்.

தற்போது நிலவிவரும் அமைதிச் சூழலில்கூட விவசாயிகள் புதிய செயன்முறைகளையோ, நவீன தொழில்நுட்பங்களையோ பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.

பல நிறுவனங்கள் எமது மக்களுக்கு விவசாய ரீதியில் உதவுகின்ற சூழலிலும், விவசாயத்துக்குச் செய்யப்படும் செலவுகள் ஒழுங்காகச் செலவுசெய்யப்படவில்லையென்பதையே அவதானிக்க முடிகின்றது.

எதிர்காலத்தில் விவசாயத்துறையில் முன்னேற்றகரமான திட்டமிடல்கள் அவசியமாக உள்ளதெனவும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - கௌரவிப்பு உரைகளை மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.நாமகள், கிளிநொச்சி - முல்லைத்தீவு விவசாய பிராந்திய ஆணையாளர் திருமதி இராமச்சந்திரா, கிளிநொச்சி அரச செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் ஜெயராணி உட்பட பலர் நிகழ்த்தினர்.

இதனையடுத்து சிறந்த விவசாயிகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிமனையும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் 65 சிறந்த விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்.

## ரயில் பெட்டி தொழிற்சாலையை இலங்கையில் அமைக்கத் திட்டம்

கொழும்பு

இலங்கையிலேயே ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு ரயில்வே மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஏ.ஏச்.எம்.பௌசி திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்குவதற்காக ரயில் பெட்டிகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள அமைச்சர் பௌசி முடிவு செய்துள்ளார்.

ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை அநுராதபுரம், நாவலப்பிட்டி அல்லது ராகமவில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த தொழிற்சாலையில் இரு ந்து மாதம் ஒன்றுக்கு ஒரு ரயில் பெட்டியேனும் தயாரிக்க முடியும் என்றும் அமைச்சர் பௌசி தெரிவித்தார்.

# அகற்றப்படாத நிலையில் 6 லட்சம் கண்ணிவெடிகள்

கொழும்பு

வடக்கு - கிழக்குப் பகுதியில் 6 லட்சத்துக்கும் அதிகமான நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதாக, ஐக்கிய நாடுகள் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதனால் சிறுவர்களும், பெண்களும் பெரும்பாலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும், கடந்த காலத்தில் பெரும்பாலான சிறுவர்கள் நிலக் கண்ணிவெடிகளால் உடல் அங்கங்களை இழந்திருப்பதுடன், உயிரிழந்திருப்பதாகவும் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்நிர்மாண அமைச்சு தெரிவித்துள்ளது.


போர்நிறுத்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலத்தில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் தங்கள் பிரதேசங்களுக்குத் திரும்பியிருப்பதாகவும், இந்த நிலையில் மீண்டுமொரு போர் ஏற்படுமாயின் நிலக் கண்ணிவெடிகளின் பாதிப்பு அதிகமாக இருக்குமெனவும் யுனிசெப் அமைப்பின் கண்ணிவெடிகளிலிருந்து பாதுகாக்கும் பிரிவின் அதிகாரி எரிக் டிபேர்ட் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு கிழக்கிலிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு தாம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துவருவதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் குலசிங்கம் தெரிவித்தார்.

# விழி பிதுங்கும் உலக விடுதலை இயக்கங்களுக்கு திசை காட்டும் கருவியாக விடுதலைப்புலிகள்...!

## ஒரு தமிழ்நாட்டுத் தமிழனின் கடிதம்

ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டச் சிந்தனை உள்ளவன் என்கிற முறையில் எழுதுகிற இந்



தச் செய்தியை நீங்கள் அவசியம் வெளியிட வேண்டும் என்பது என் விருப்பமாகும்.

விடுதலைப் பேராளிகள் மீது இரசிக மனோபாவத்தோடு - தமிழ் நாட்டிலே நிகழ்த்தப்படாத சாகசங்கள் அல்லது தமிழ் நாட்டுத் தமிழன் கண்டிராத, பார்த்திராத, கேட்டிராத சாகசங்களைச் செய்தவர்கள் என்ற காதல் கொண்டு இந்தச் செய்தி எழுதப்படவில்லை.

விடுதலைக்குப் போராடுகிற ஒரு இனம் அதுவும் எங்களது தொப்புள் கொடி உறவு கொண்ட மக்கள் விடுதலைக் களத்திலே நிற்கிறார்கள் என்ற அடிப்படையிலும் -

ஒடுக்குகிற ஒரு தேசிய இனம் - எதுவித ஆதரவின்றி அநாதையாக களத்திலே நின்று சதிகளையும், யுத்தங்களையும் சதிராடி வருகிற பிரமிப்பின் பின்புலத்திலுமே இதை எழுத வேண்டியவனாக உள்ளேன்.

மிக அண்மைக்காலமாக குறிப்பாக இலங்கை ஜனாதிபதித் தேர்தல் காலத்துக்கு சிறிது முன்பாக புதினம் இணையத்தளத்தை நான் படிக்க நேர்ந்தது. தொடர்ச்சியாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளை இந்த இணையத் தளம் ஊடாக என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினராக உள்ள பாலகுமாரன் அவர்களது அரசியல் அரங்க நிகழ்வுகள். விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பளார் சு.ப தமிழ்ச் செல்வனது நீண்ட நேர்காணல்கள், உலக நாடுகளின் பிரதிநிதிகள் தங்களைச் சந்திக்கின்ற போது தருகிற மனுக்கள் ஆகியவற்றை உற்றுநோக்கிய போது உண்மையிலே பாலகுமாரன் ஒரு நிகழ்விலே சொல்லி இருந்தது போல் -


செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு -

ஈராக் மீதான அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்குப் பிறகு - உலக விடுதலை இயக்கங்களின் இருப்பு சாத்தியமா என்ற கேள்வி எனக்கும் எழுந்தது உண்டு.

தமிழ் நாட்டில் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம் இன்னும் தலைமறைவு இயக்கங்களாக இலை மறைகாயாகத்தான் இருக்கிறது. ஈழத்தைப் போல ஒடுக்கிற தேசிய இனம் என்பது இங்கே வெளிப படையாக இல்லாமல், இராணுவ ஒடுக்குமுறையாக இல்லாமல், 2 ஆயிரம் ஆண்டுகால கருத்து வன்முறை என்கிற ஆயுதத்தால் ஒரு குறைந்த விழுக்காட்டு இனம் எங்களை அடிமைப்படுத்தி இருக்கிறது.

அந்த மூளையைத் தமிழ் நாட்டுத தமிழர்கள் கழற்றி வைக்க இன்னொரு தந்தை பெரியார்தான் வர வேண்டும்.

இப்படியான அவலச் சூழலோடு - அமெரிக்கா போன்ற நாடுகளின் பயங்கரவாதத்துக்கு எதிரான அணியைக் காட்டி, இங்கே இனித் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டம் சாத்தியமே இல்லை.



உலகில் எங்குமே விடுதலைப் போராடடம் சாத்தியமே இல்லை என்று தமிழ்நாட்டு மிதவாதத்தமிழ்த் தேசியத் தலைவர்கள் இன விடுதலையில் அக்கறை கொண்டு வரும் இளைஞர்களுக்குக் கற்பிதம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு விடுதலை இயக்கம் முழுமையான அர்ப்பணிப்போடு இயங்கினால் எந்த ஒரு வல்லரசையும் வென்றெடுக்க முடியும் என்பதை விடுதலைப் புலிகள் தங்களது இராஜதந்திர செயற்பாடுகளின் மூலம் நிரூபித்து உள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவைத் தான் விடுதலைப்புலிகள் ஆதரிப்பார்கள். ஆதரிக்க வேண்டும். அவர் வந்தால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடும் என்று தமிழ்நாட்டுத் தமிழர்களும் நம்பிக் கொண்டிருந்த போது,உங்கள் புதினம் மூலமான பாலகுமாரன் அவர்களது கருத்தைப் படித்தபோது கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

விடுதலைப் புலிகள் என்ன நிலையினை மேற்கொள்கிறார்கள் என்ற கேள்வி எழுந்தது?

ரணில் தோற்றபோதும் கூட தமிழ நாட்டுத் தமிழர்களுக்கு - தமிழ் நாட்டுத் தமிழ்த் தேசிய சக்திகளுக்கு ஏன் விடுதலைப் புலிகள் இப்படிச் செய்துவிட்டார்கள் என்று தான் கேள்வி எழுந்தது.

ஆனால், புதினத்திலும் சமீப காலமாக தமிழ் நாட்டு இதழ்களிலும் வருகிற செய்திகளைப் பார்க்கிறபோது.-

ரணிலின் சதித்திட்டத்தைப் பாலகுமாரன் அனுபவபூர்வமாக முதன் முதலில் அம்பலப்படுத்தினார். அது ஊகமாகவே இருந்திருக்கும் - ரணில் கட்சியினர் இருவர் வாய் திறக்காமல் இருந்திருந்தால்.!

ஆனால் ரணிலையும் தமிழர்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை எனறு அனுபவத்தின் வாயிலாக பாலகுமாரன் கூறியதன் உண்மையை ரணில் கட்சியினர் இருவர் ஒப்புக் கொண்டதாக வெளியானது.


அதேபோல் இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் திருகோணமலையின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகத்தான் இந்தியா தலையிடுகிறது என்பதை பிரபாகரன் அப்போது தெரிந்திருந்த செய்தியையும் இதே நேரத்தில் புதினம் வாயிலாகப் படிக்க நேர்ந்தது.

இந்த இரண்டு விடயங்களும் உண்மையில் விடுதலைப் புலிகளின் தொலைநோக்குச் சிந்தனையும், கணிப்பும் அவர்களது கடந்த கால வெற்றிகளின் பின்னணியை தெளிவாகச் சொல்லியது.

தேர்தல் முடிந்தது - மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

மகிந்த ராஜபக்ஷ குறித்து தொடர்ந்து பாலகுமாரன் தெரிவித்திருக்கும் விமர்சனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் நிரூபிக்கப்பட்டே வருகின்றன.

நோர்வே தொடர்பாக ராஜபக்ஷ



எடுக்கும் முடிவுகளுக்கு எதிராக இரு சிங்களப் பேரினவாதக் கட்சிகளும் தொடர்ந்து கருத்துக்களைக்

> ' ' ஒரு விடுதலை இயக்கம் முழுமையான அர்ப்பணிப்போடு இயங்கினால் எந்த ஒரு வல்லரசையும் வென்றெடுக்க முடியும் என்பதை விடுதலைப் புலிகள் தங்களது இராஜதந்திர செயற்பாடுகளின் மூலம் நிரூபித்து உள்ளனர். ''

கூறி வருகின்றன. இந்த முரண்பாடு எங்கே போய் முடியும்?. போகிற போக்கைப் பார்த்தால் இந்த முரண்பாடுகள் பாலகுமாரன் கூறியிருந்ததைப் போல் சிங்களவர்களுக்கிடையே ஒரு உள்நாட்டு யுத்தத்தை ஏற்படுத்திவிடக் கூடும் என்று தெரிகிறது.

இவைகளை உள்நாட்டு அரசியல் தொடர்பான புலிகளின் அனுபவங்கள் என்று ஒருபக்கம் வைத்துக் கொள்ளலாம்.

'தம்பி பிரபாகரன்' அண்ணன் அவரகள் பேசிய மாவீரர் நாள் பேச்சு உணமையில் எங்களுக்கு ஈழ விடுதலைப் போராட்டத்தின் கடந்த கால அவல நிலைகளைச் சொன்னது.

மேலும் பயங்கரவாதம் குறித்து அண்ணன் எழுப்பியிருக்கும் கேள்வி மகிழ்ச்சியளித்தது.

எதிர்காலத்தில் போராடுகிற - இப்போது போராடிக் கொண்டிருக்கிற விடுதலைப்போராட்ட அமைப்புகள் மென்று முழுங்கும், புழுங்கிச் சாகும் ஒரு விடயத்தை ஊரறிய அவர் முழங்கியிருப்பது மட்டுமல்ல, சர்வதேச முகத்தில் அறைந்தாற் போல் விடுதலைக்குப் போராடுபவனும் பயங்கரவாதியா என்று கேள்வி எழுப்பி இருக்கிற துணிச்சல் ஆறுதலையும், நம்பிக்கையையும் அளிகிறது.

அமெரிக்கப் பூச்சாண்டிகளைக் காட்டி இங்கே தமிழ் நாட்டில் தேசிய இன விடுதலை பேசிய மிதவாதிகள் மூச்சடைக்க முயற்சிக்கும் செயல்களுக்கு செவினி அடி என்று சொல்லலாம் அதை

மிக ஆழமான கேள்வி அது!

பரபாகரன் அண்ணனது உரைக்கு விளக்கம் அளித்து அன்ரன் பால சிங்கமும், பாலகுமாரனும் தெரிவித்திருந்த கருத்துக்கள் மேலும் வியப்பூட்டின.

உண்மையைச் சொன்னால். இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு செய்தியை சர்வதேச சமூகத்துக்குச் சொல்லப் போகிறது என்று சொல்லி இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் புரியப் படாமலேயே இருந்தது.

ஆனால் இந்தியத் தலையீடு, நோர்வேயின் மள் வருகை, சீனா தலையிடுமா? என்ற கேள்வி அடுத்தடுத்து உங்களது இணையத் தளம் வாயிலாக எழும்பிய போது, இந்துமா சமுத்திரத்தினது அரசியலை ஓரளவு அறிந்தவன் என்ற வகையிலும், சர்வதேச நடப்புகளின் மீது அக்கறை கொண்டவன் என்ற வகையிலும் மிரட்சியடையத்தான் முடிந்தது.

நாளைய நகர்வுகளை எப்படித் துல்லியமாக இவர்களால் சொல்ல முடிகிறது.

பாலகுமாரன் கூறியதுபோல் இன்னொன்று நடந்துள்ளதை நான் சுட்டிக்காட்ட எண்ணுகிறேன்.

உலக விடுதலைப் போராட்டங்களை மென்மைப்படுத்தி பேச்சு வார்த்தைக்கு இதுவரை அழைத்து வந்த சர்வதேச சமூகம் - இப்போது புதிய அனுபவத்தைப் பெறப் போகிறது, பல்வேறு நாட்டுப் புரட்சிகளைப் போல் உலக அரசியலில் ஒரு அதிசயமாக இது இருக்கும் என்றார்.

ஆம் அப்படித்தான் நடக்கிறது.

இங்கே ஐக்கிய இந்தியக் குடியரசின் தலைமை அமைச்சரைச் சந்தித்த நோர்வே தலைமை அமைச்சரின் பேட்டியானது - சிங்களவர்களுக்கு நிபந்தனைகளை விதிக்கப் போவதாகச் சொல்லியது.

பாலகுமாரன் முன்பு சொன்னது போல் நோர்வே நாட்டுக்கு இது இடியப்பச் சிக்கல்தான். அவர்கள் புதிய அனுபவம் பெறப் போகிறார்கள் என்பது அவர்களது இந்தியப் பயணத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

இதுவரை இந்தியாவை பஞ்சாயத்துக்கு அழைக்காமல் இருந்த நோர்வேக்காரர்கள் இப்போது ஒரு பிராந்திய பெரிய அண்ணனையும் அனுசரித்துப் போக வேண்டிய நிலையில் உள்ளது.

இந்தோனேசியாவின் ' ஆச்சே' விடுதலைப் போராட்டத்திலும், முன்னாள் பலஸ்தீன பேச்சுவார்த்தைகளிலும் சட்டையை தூக்கிவிட்டுக் கொணடு ஏன் ஈழப் பிரச்சினையிலும் ஒரு நிலைவரை நெஞ்சு நிமிர்த்தி நடந்த நோர்வே.

இப்போது-

உங்கள் மொழிகளிலேயே சொல்வதாக இருந்தால் -

அனுசரணையாளராக உள்ள நோர்வேக்கும், இலங்கைக்கும் - இந்தியா என்ற ஒரு அனுசரணையாளர் தேவைப்படுகிற விசித்திரம் இப்போது நடந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டில் இதுநாள் வரையில் ஈழப் புலிகளை கடுமையாக விமர்சனம் செய்து வந்த ஏடுகள் அனைத்தும் ஈழத்திலே யுத்தம் என்கிற தலைப்புச் செய்தியைப் போட்டு பிரபாகரனின் கால அவகாச தந்திரத்தைப் பாராட்டுகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் இராஜ தந்திரத்தின் வெற்றியாகக் கூட இதை நான் நினைக்கிறேன்.

தமிழ் நாட்டு ஏடுகள் எழுதாத அவதூறுகளும், விமர்சனங்களும் இல்லை. இப்போதும் எழுதிக் கொண்டு இருக்கின்றன. ஈழத்திலே பரபாகரன் உரை ஆற்றிவிட்டார். யுத்தம வரப்போவதால் இங்கே இருந்து டீசல் போன்றவற்றை அவர்கள் வாங்கிச் சேமிக்கிறார்கள். அதனால் கடலோரப் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டு வருவதாக இப்போதும் எழுதுகிறார்கள்.

ஆனால் அந்த விமர்சனங்களுக்கும்கூட தங்களது செயலினால் பதிலடி கொடுத்து இங்கேயும் தங்களது இராஜதந்திரத்தை ஈழத்து பேச்சுகளின் மூலமே வென்றுகாட்டி இருப்பது குறித்து எப்படி மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்.

நான் படித்த வரலாற்றில் குர்து இன விடுதலைத் தலைவர் 'ஒகாலன' சிறைக் கொட்டடியில் அடைக்கப் பட்டதும் அந்த விடுதலைப் போராடடத்தின் கதி கேள்விக்குள்ளாகி விட்டது. ஒகாலன் தெளிந்த மார்க்சிய லெனிய சித்தாந்தவாதியாக உருவாகி, காலச் சூழலுக்கு ஏற்ப மத நம்பிக்கையுள்ளோரையும், பகுத்தறிவாளர்களையும் ஒருங்கிணைத்து ஒட்டுமொத்த குர்து இன மக்கள் விடுதலைப் பேராட்டமாக அவர் தனது தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தினார். ஆனால் அவர் வெளிநாடு ஒன்றில் கைதான பிறகு அந்த விடுதலை இயக்கத்தின் நிலை முனனைப்போல் வீச்சோடும், வீரியத்தோடும் இல்லை என்றும் அமெரிக்காவின் அணிசேர்க்கையில் இணைநதுவிட்டது என்றும் தெரிகிறது.

அதேபோல் 'ஆச்சே' தேசிய இன விடுதலைப் போராட்டம் ஒரு குறைநத பட்சத் தீர்வுத் திட்டத்துடன் அடங்கிப் போய்விட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவின் நாகாலாந்து தேசிய இன விடுதலைப் போராட்டமும் பேச்சு வார்த்தை என்கிற அபாயச் சூழலில் சிக்கிக் கொண்டு தத்தளிக்கிறது. இந்தியாவின் சீக்கியர் விடுதலைப் போராட்டம் சிதைக்கப்பட்டு விட்டது. காஷ்மீர் விடுதலைப் போராடடம் திசைமாறிப் போய்விட்டது.

இந்த விடுதலை இயக்கங்களுக்கு இணையான காலத்திலே உருவான விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகளின் இத்தகைய தொலைநோக்குச் சிந்தனை - அந்த இயக்கங்களுக்கு இருந்திருந்தால், ஒடுக்கப்பட்டிருக்கிற தேசிய இனங்களது உரிமைக் குரல் - குரல் வளையோடு நசுக்கப்பட்டிருக்காது.

உலக வரலாற்றில் ரஷ்யப் புரட்சியானது தேசிய இனங்களுக்கு ஒரு முன்னோடி விடுதலை இயக்கமாகி நூற்றாண்டு காலம் நெருங்குகிறது.

அடுத்த சகாப்தமாக இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகத்தில் உலகம் ஒரு கிராமமாக சுருங்கிப் போய் அமெரிக்கா என்கிற வல்லரசின் பின்னால் ஒட்டுமொத்த நாடுகளும் அணிதிரளவேண்டிய காலகட்டத்ல் இன்னமும் விடுதலை பெறாத அத்தனை தேசிய இனங்களும் புத்துயிர் பெறவும், குரல் வளையினை நெரித்தவர்களது நெஞ்சில் ஏறி விடுதலை வானில் பறப்பதற்குமான ஒரு மிகவும் சக்திவாய்ந்த வழிகாட்டியாக, தத்தளிக்கிற இனங்களினது விடுதலைக்கான திசைகாடடியாக விடுதலைப்புலிகளின் அரசியல் நகர்வுகள் உத்வேகத்தை அளிகின்றன என்றால் அது மிகையல்ல - இரசிக மனோபாவம் அல்ல. கண் முன் நிகழ்கின்றவைகளின் எதேச்சையான உண்மையின் பதிவே இதுவாகும்.

— நன்றி இணையத்தளம்

# பத்திரிகை பேரவை சட்டதிட்டங்களை இலங்கை இராணுவம் மீறியுள்ளது!

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

கொழும்பு

நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மீதான இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைக்கு இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் -

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தில் இராணுவத்தினர் சோதனை நடத்தியதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இது தமிழ்த் தேசிய ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட மற்றுமோர் அச்சுறுத்தலாகவே ஒன்றியம் கருதுகிறது. முன்னறிவித்தல் எதுவுமின்றி இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அலுவலகத்தை சோதனையிடப் போவதாக பத்திரிகை ஆசிரியருக்கோ அல்லது பத்திரிகை நிறுவன இயக்குனருக்கோ இராணுவம் அறிவிக்கவில்லை.

சோதனை செய்யப்பட்ட பின்னரும் சோதனை மேற்கொண்டமைக்கான காரணத்தை பத்திரிகை ஆசிரியரிடம் இராணுவம் தெரிவிக்கவில்லை. இந்தச் செயலானது இலங்கை பத்திரிகைப் பேரவையின் சட்டதிட்டங்களை மீறியுள்ளது.

அத்துடன், ஊடக சுதந்திரம் பற்றிய புதிய அரசாங்கத்தின் கோட்பாட்டுக்கு மாறாக உள்ளது. எந்தவொரு ஊடக நிறுவனங்கள் மீதும் பொலிஸாரோ அல்லது இராணுவமோ சோதனை மேற்கொள்வதாக இருந்தால் சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனத்துக்கு அறிவிக்க வேண்டும் என்பது பொதுவான விதிமுறையாகும்.

ஆனால், நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையானது அந்த விதிமுறைகளுக்கு ஒப்பானதாக அமையவில்லை. எவ்வாறாயினும், எந்த விதிமுறைக்கு அமைவாக வேனும் ஊடக நிறுவனம் ஒன்றை சோதனை செய்யவேண்டிய அவசியமும், உரிமையும் இராணுவத்துக்கு இல்லை என்பதையே ஒன்றியம் சுட்டிக் காட்டுகின்றது.

தமிழ் ஊடகம் என்பதால் அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை என்பதால் இராணுவத்தினர் அவ்வாறு விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார்களா என ஒன்றியம் சந்தேகிக்கின்றது.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் இராணுவத்தினர் பல தடவைகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அது தொடர்பாக இதுவரை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் ஈழநாடு பத்திரிகை அலுவலகம் மீதான சோதனை நடவடிக்கை இடம்பெற்றிருக்காது.

எனவேதான் இனிமேலாவது இவ்வாறான ஊடக சுதந்திரத்துக்கு மாறான நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொள்ளாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றியம் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவையும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கிறது.

அத்துடன், அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் ஊடக நிறுவனங்களையும் தமிழ் ஊடகவியலாளர்களையும் சோதனைக்குட்படுத்துவதும், அவர்களைக் கைதுசெய்துவதும் - மிரட்டுவதும் நாகரிகமற்ற செயல் என்பதுடன் அது குறித்தும் ஒன்றியம் மிகவும் கவலையும், வேதனையும் அடைகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதி ஊடகத்துறை அமைச்சருக்கும், அரச ஊடகத் திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



இலங்கை இராணுவத்தின் கவசப் படைப்பிரிவின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது கவசப்படைப் பிரி வின் பிரதம தளபதியும் இராணுவப் பிரதித் தலைமை அதிகாரியுமான மேஜர் ஜெனரல் பரமிகுலதுங்க அணிவ குப்பை பார்வையிடுகிறார். (படம்:ரொய்ட்டர்)

# இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை - நாசிவன்தீவில் இனந்தெரியாத பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

சுமார் 20 வயதுக்கு மேற்பட்டவரென மதிப்பிடப்படும் இந்தப் பெண்ணின் சடலம் நாசிவன்தீவு என்ற இடத்திலிருந்து மீட்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் சடலம் ஒன்று கிடப்பதாக பொதுமக்கள் தகவல் கொடுத்ததை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இந்தச் சடலத்தை மீட்டெடுத்தனர்.

சடலம் பிரேதபரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.



வங்கக் கடலில் மீண்டும் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதையடுத்து மட்டக்களப்பு நகரில் நேற்று கடும் மழை. பெய்துகொண்டிருந்தபோதும் படையினர் தீவிர பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காட்சி. (படம்:ரொய்ட்டர்)

# எமது படை பலத்தால் மட்டுமே வெற்றியை தீர்மானிக்கமுடியும்

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

கிளிநொச்சி

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து சமாதானப் பேச்சுக்களின் மூலம் நாம் எதையுமே பெற்றுக் கொள்ளவில்லை. எமது பலத்தால் மட்டுமே வெற்றியைத் தீர்மானிக்க முடியும் என- கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

மாவீரர் லெப்.கேணல் மறவன் மாஸ்டரின் முதலாமாண்டு நினைவு நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

1985 ஆம் ஆண்டுமுதல் அரச தரப்புடன் பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்றன. இதன்மூலம் நாம் வெற்றி எதையும் பெறவில்லை. கடந்த காலங்களில் நாம் பலமான நிலையிலிருந்து போரிட்டுப் பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம்.

ஆனால், தற்போதுள்ள சமாதான காலத்தில் எந்தவொரு மாற்றமும் நடைபெறவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதக் களைவையும் அரசு நடைமுறைப்படுத்தவில்லை. எமது மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற கடல்வளம், நிலவளம் அனைத்தும் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகிறது.

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பேச்சுக்கள்மூலம் நாம் எதையும் பெறவில்லை என்றும் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை கடற்படையின் துணைப்படையினரின் அணிவகுப்புடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஈகச்சுடரை அவரது துணைவியார் ஏற்றிவைக்க, மலர் மாலையை திருகோணமலை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் சீராளன் அணிவித்தார். தொடர்ந்து தலைமையுரை, நினைவுரைகள், சிறப்புரை ஆகியன இடம்பெற்றன.

# சென்னையிலிருந்து சென்ற ஈ-மெயில்; இந்திய நாடாளுமன்றம் ஒத்திவைப்பு!



புதுடெல்கி

இந்தியாவில் கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி நாடாளுமன்றம் மீது தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர்.

இதில் 12க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டது.

தீவிரவாதிகளின் தற்கொலைப்படை மீண்டும் நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதை புலனாய்வுத்துறை கண்டுபிடித்து எச்சரித்தது. இதைத் தொடர்ந்து நாடாளுமன்ற வளாகம் முழுவதும் நவீன கருவிகள் பொருத்தப்பட்டுபாதுகாப்பு ஏற்பாடுகள் 5 அடுக்கு கொண்டதாக மாற்றப்பட்டது.

இந்தப் பலத்த பாதுகாப்பை மீறி சந்தேகப்படும் வகையில் வரும் யாரும் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடியாது என்ற நிலை இருந்தது. என்றாலும் நேற்றுக்காலை அமெரிக்க தூதரகம் மற்றும் புலனாய்வுத்துறைக்கு சென்னையிலிருந்து சென்ற ஈ-மெயில் தகவலால் நாடாளுமன்றமே அல்லோலகல்லோலப் பட்டது.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கும், அமெரிக்கத் தூதரகத்துக்கும் ஒரு ஈ-மெயில் சென்னையில் இருந்து வந்தது. அதில் நாடாளுமன்றத்துக்குள் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளன. விரைவாக பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

காலை 11.45 மணிக்கு நாடாளுமன்ற சபாநாயகரின் செயலாளரிடம் வெடிகுண்டுத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சபையை



விட்டு எம்.பிகள் அனைவரையும் உடனே வெளியேற்றுமாறு சபாநாயகருக்கு இணைச் செயலாளர் ஒரு சீட்டு கொடுத்தார். அந்த சீட்டை வாங்கிப் பார்த்ததும் சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி அதிரச்சியடைந்தார்.

சபை ஒத்தி வைக்கப்படுகிறது. எம்.பிகள் அனைவரும் உடனடியாக சபையைவிட்டு வெறியேறவும் என்று கூறிவிட்டு சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி எழுந்து சென்றார். திடீரென அவர்நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தது எம்.பிக்களுக்கு எதுவும் புரியவில்லை.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி என்ன, என்ன என்று விசாரித்தனர். அடுத்த ஓரிரு நிமிடங்களில் வெடிகுண்டு மிரட்டல் பற்றி தெரிந்ததும் எம்.பிக்களிடம் பரபரப்பும் பதற்றமும் தொற்றிக்கொண்டது. எல்லா எம்.பிகளும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

டெல்கி மேல்சபை எம்.பிக்களும் இதே பாணியில் வெளியேற்றப்பட்டனர். மேல்சபை எம்.பிகளை வெளியேறுமாறு துணை ஜனாதிபதி பைரோன்சிங் செகாவத் அறிவுறுத்தினார்.

வெளியேற்றப்பட்ட எம்.பி.க்கள் அனைவரும் நூலக கட்டடத்துக்குள்ளும், அருகில் உள்ள பூங்காவிலும் தஞ்சம் அடைந்தனர்.

வெடிகுண்டு மிரட்டலால் 11.55 மணிக்கெல்லாம் நாடாளுமன்ற இரு அவைகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. அந்தச் சமயத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள தன் அலுவலகத்தில் பிரதமர் மன்மோகன்சிங், முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து பேசிக்கொண்டிருந்தார். அவர்களின் பேச்சு முடிந்த நிலையில் வெடிகுண்டு பீதி பரவியிருந்தது. உடனடியாக பிரதமர் மன்மோகன்சிங் பலத்த பாதுகாப்புடன் சவுத் பிளாக்கில் உள்ள ரகசிய இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவர் அதிக பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டார். இதற்கிடையே நாடாளுமன்றத்துக்குள் வெடிகுண்டுகள் ஏதேனும் பதுக்கி வைக்கப்பட்டு உள்ளதா என்பதை அறிய முழு வீச்சில் சோதனைகள் நடந்தன. இதற்காக நாடாளுமன்ற இணைப்பு வீதிகள் அனைத்தும் அனைத்தும் மூடி சீல் வைக்கப்பட்டன.

பிரதமர் அலுவலகம், ராணுவ, உள்துறை, நிதி அமைச்சக அலுவலகங்கள் சீல் வைத்து மூடப்பட்டன. அதன் பின்னர் 8 கம்பனி வெடிகுண்டு நிபுணர்கள் நாடாளுமன்றம் முழுவதையும் சல்லடை போட்டுத்தேடினார்கள். மோப்ப நாய்கள் உதவியுடனும் வெடிகுண்டு இருக்கிறதா? என்று சோதனையிடப்பட்டது. ஆனால், எங்கும் எதுவும் சிக்கவில்லை.

# சீன வைத்தியசாலையில் தீப்பற்றி நோயாளர்கள் உட்பட 39 பேர் மரணம்



சீன வைத்தியசாலையில் பற்றிய தீயால் நோயாளிகள் உட்பட 39 பேர் பரிதாபகரமாக உயிரிழந்ததாக சீனாவின் சின்குவா செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சீனாவின் வட கிழக்கு நகரமான லியோ யூனிலுள்ள வைத்தியசா லையிலேயே இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 33 பேர் நோயாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலை கட்டடப் பகுதியில் தீப்பிடித்ததை அடுத்து அங்கிருந்த பெருமளவானோர் தப்புவதற்காக யன்னலூடாகப் பாய்ந்ததாகவும், இதனால் பெருமளவானோர் காயமடைந்துள்ளதாகவும், சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் 24 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மற்றய 15 பேரும் மற்றொரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தீவிபத்து ஏற்பட்டதற்கான காரணம் எதுவும் கண்டறியப்படவில்லை.

சீனாவில் கடந்த மாதம் நீரில் கலந்த நச்சு வாயுவாலும், சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தாலும் 140 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விடுதலைப் புலிகள்மீது தடை விதிப்பதை ஒத்திவைத்தது ஐரோப்பிய ஒன்றியம்!


கொழும்பு—

விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகளில் தடைசெய்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முடிவெடுப்பதை இடைநிறுத்தியிருப்பதாகவும் - இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதை ஒத்திவைத்துள்ளதாகவும் கொழும்பிலுள்ள தூதரக தகவல்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றியம் இந்த மாத நடுப்பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளை தமது நாடுகளில் தடைசெய்வதென முன்னர் தீர்மானித்திருந்தது. ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் வகையிலான உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்ததையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை ஒத்திவைத்துள்ளது.

சமாதான முயற்சிகள் தொடங்கப்படவுள்ள நிலையில் தம்மால் எடுக்கப்படவுள்ள நிலைப்பாட்டால் எவ்வித தடையும் ஏற்படக்கூடாதென்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடாக உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால் அவர்கள் சமாதான முயற்சிகளிலிருந்து விலகக்கூடிய நிலைமை ஏற்படலாமென்ற ஐயம் தூதரக மட்டத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)




இலங்கை இராணுவத்தில் முஸ்லிம்களுக்கென தனியான படைப்பிரிவொன்று உருவாக்கப்படவேண்டும் எனக்கோரி நேற்று கொழும்பில் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை முடிந்த பின்னர் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காட்சி. (படங்கள்:- ரொய்ட்டர்)

# புலனாய்வுப்பிரிவு ஆலோசகராக மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரண

கொழும்பு—

இராணுவ புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் பிரிகேடியர் ஷக்கி பதவியிலிருந்து நீக்கப்பட்டு யாழ்.குடாநாட்டின் பொது அலுவலக அதிகாரியாக நியமிக்கப்பட்டமைக்கு - அரசியல் அழுத்தங்களேகாரணமென கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழொன்று தெரிவித்துள்ளது.

இராணுவ புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் தம்மிக லியனகே - ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் செயற்பட்டவர். பீரங்கிப் படைப்பிரிவின் அதிகாரிகளில் ஒருவரான இவர் இதற்கு முன்னர் புலனாய்வுப் பணிகளில் ஒருபோதும் பணியாற்றியிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தாய்லாந்திலிருந்து கடந்தவாரம் கொழும்புக்கு அழைக்கப்பட்ட புலனாய்வுப்பிரிவின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண அடுத்த மாத தொடக்கத்திலிருந்து புலனாய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வு சேவைகள் குறித்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய மேஜர் ஜெனரல் ஹெந்தவிதாரண தாய்லாந்து சென்று - தான் தற்போது மேற்கொண்டு வரும் செயற்பாடுகளை முடித்துவிட்டு கொழும்பு திரும்பவுள்ளார் என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (தே)

## நமது ஈழநாடு...

முறைகளின் வெளிப்பாடாகவே தற் போதையே சூழ்நிலையை நாம் அணுகுகிறோம். இந்த எதிர்பாராத சூழ்நிலையால் பல இராணுவத்தினர், போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு முன்னரும் யாழ்ப்பாண ஊடகங்களுக்கு என்ன நடந்ததோ அதே சூழ்நிலைக்கு இப்போதும் அவை முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதாக நாம் அச்சமடைகிறோம்.

அமைதியற்ற சூழ்நிலையின் வெளிப்பாடாக இராணுவத்தினர் மேற்கொண்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையானது கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்தை நசுக்குவதையும் இராணுவத்தின் நெருக்குவாரங்களுக்கு ஊடகங்கள் உள்ளாவதையும் இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள இந்தச் சூழலில் சவாலான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் யாழ். ஊடகவியலாளர்கள் உள்ளனர்.

இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய இருதரப்பினரும் கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்துக்கு உரிய மதிப்பளித்து ஊடகங்களை இலக்கு வைக்காமல் இருக்கவேண்டுமென வேண்டுகோள் விடுகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும்...

மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட வளிமண்டல ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

நேற்றுமாலை 6 மணியளவில் தாழமுக்கம் வடமேற்குத் திசையில் நகர்ந்துகொண்டிருப்பதாகவும் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதேவேளை - வடக்கு, கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் கடுங்காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கடற்பகுதிகளில் கடுங்காற்று வீசுவதுடன், கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழகத்துக்கு இம்முறை அதிகளவான மாணவர்கள்!

கொழும்பு—

இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் அதிக மாணவர்கள் இந்த முறை சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மெண் டிஸ் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய இம்முறை 16 ஆயிரத்து 292 பேர் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இந்தத் தொகை 2004 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 14 ஆயிரத்து 850 மாணவர்களைவிட 1442 இற்கும் அதிகமாகும்.

17 புதிய பாடத்திட்டங்கள் இம்முறை சேர்த்துக்கொள்ளப்பட்டதனாலேயே அதிகளவான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## படையினரின் தேடு...

சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் வேளையில் உடமைகள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை அநாகரிகமான முறையில் தூக்கி வீசி சோதனையில் ஈடுபடுகின்றனர். வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள மாவீரர்களின் உருவப்படங்களை அகற்றுமாறு மக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் மூடப்பட்டுள்ள காரியாலயங்களை உடைத்து சோதனை நடத்திவருவதுடன், தளபாடங்களையும் ஏற்றிச்செல்கின்றனர். இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கை போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுவதுடன் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகவும் உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

## கருணா...

தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## படையினரின்...

எவ்விதகாரணமுமின்றி துப்பாக்கிகளால் தாக்கியதிலேயே இவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டது.

## இராணுவத்...

பதவியேற்றதன் பின்னர் வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் அவரைச் சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

## நடமாடும்...

நியூயோர்க் சிப்பிங் லைன் என்ற கப்பல் மூலம் கடந்த 13 ஆம் திகதி கொழும்புக்கு எடுத்துவரப்பட்ட இந்த நடமாடும் சத்திரசிகிச்சைக் கூடத்தில் அம்புலன்ஸ் - 5 பொலோகுவா என எழுதப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்றிரவு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்படவிருந்த நிலையில் கடற்படையினர் இதைத் தடுத்து வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளை...

யுத்தத்தை உருவாக்கும் வகையில் அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அமைதிப் பேச்சுகளுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்து - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடிதம் அனுப்பியுள்ளார்.

அரச சமாதான செயலகம் மற்றும் நோர்வே அனுசரணையாளர் ஊடாக இந்தக் கடிதத்தை மகிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்துள்ளார். விடுதலைப் புலிகளின் பதிலுக்காக அரசாங்கம் காத்திருக்கிறது. சாதகமான பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி குழுவினரிடம் நேற்றைய சந்திப்பின்போது மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியும், மகிந்த ராஜபக்ஷவும் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்துவதை ஏற்றுக்கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களில் யுத்த நிறுத்தம் தொடர்பாகவோ, அமைதி முயற்சிகள் தொடர்பாகவே எதனையும் பேசத் தயாராக உள்ளோம். அரசாங்கம் தமது முன்னைய நிலைகளின் இறுக்கத்தைத் தளர்த்தி ஆசிய நாடு ஒன்றில் பேச்சு நடத்தலாம் என்றும் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதென நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# புலிகள்-அரசு இடையே கைதிகள் பரிமாற்றம்?

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளதாக மதங்களுக்கிடையிலான சமாதான நிதியத்தின் இணைத் தலைவர் பி.ஆர். அந்தோனிமுத்து தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸ் அதிகாரிகளை விடுவிப்பதற்காக இந்தக் கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக அரசாங்கத் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நத்தார் பண்டிகைக்கு முன்னர் இந்த மூன்று பொலிஸாரும் விடுவிக்கப்படக்கூடும் என்றும் அந்தோனிமுத்து மேலும் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக கரித்தாஸ் சிறிலங்கா (செடெக்) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டேமியன் பெர்னாண்டோவின் கடிதத்தை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரனவிடம் நேற்றுமுன்தினம் தாம் கையளித்ததாகவும் அதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பதாக உறுதியளித்திருப்பதாகவும் அந்தோனிமுத்து தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் பணியாற்றிய இந்த மூன்று பொலிஸாரும் கடந்த ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் பிரதேசதிற்கு அனுமதியின்றிச் சென்றதால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த மூவரையும் விடுவிக்க வலியுறுத்தி டேமியன் பெர்னாண்டோ எழுதிய கடிதத்தை மதங்களுக்கிடையிலான சமாதான நிதியத்தின் தலைவரும் கேகாலை - குடாகம புனித அந்தோனியார் தேவாலயத்தைச் சேர்ந்த வருமான டட்லி அத்தநாயக்கவும் கடந்த 7 ஆம் திகதி விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர். இந்தச் சந்திப்பின்போது கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக விடுதலைப் புலிகளும் கருத்துத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து இலங்கை அரசுக்கு இந்த விடயம் தொடர்பாக டேமியன் பெர்னாண்டோ கடிதம் அனுப்பியுள்ளார். (தே)

# மகிந்த உட்பட நால்வரைக் கொல்ல கொழும்புக்கு தற்கொலைப் படை!

## புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளதாம்

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட நான்கு முக்கியஸ்தர்களைப் படுகொலை செய்யும் நோக்கில் - நான்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அணிகள் கொழும்பு நகருக்குள் பிரவேசித்திருப்பதாக புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது.

இதுகுறித்து ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிடுகையில் -

கொழும்பு நகருக்குள் பிரவேசித்திருக்கும் இந்தத் தற்கொலைத் தாக்குதல் குழுக்கள் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கொழும்புப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் வஜிர விஜே குணவர்த்தன ஆகியோரை படுகொலை செய்யத் திட்டமிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் குழுக்களுக்கு திருபா என்பவர் தலைமையேற்றுள்ளதாகவும் கடந்தசில நாட்களுக்குள் தலைநகருக்குள் இவர்கள் ஊடுருவியிருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவு எச்சரித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகிந்தவின் இந்தியப் பயணத்தின் பின் பேச்சுக்கள் தொடர்பான இறுதி முடிவு!

## அமைச்சர் டி.யூ. குணசேகர

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தின் பின்னர் -அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான இறுதி முடிவு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவு வழங்கிய 28 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை கடந்த 14 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசியபோது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் -

இதன்போது சமாதான முயற்சிகள் தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் தமது ஆதரவைத் தெரிவித்ததாகவும் அமைச்சர் குணசேகர தெரிவித்தார். (தே)

# இராணுவ செய்திகள் வெளியிடுவதை தவிர்க்கக் கோருகின்றார் ஜனாதிபதி!

கொழும்பு—

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய - படைத்தரப்புத் தகவல்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களை வெளியிடும்போது ஊடகங்கள் மிகவும் கவனத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொள்ள விருக்கிறார்.

குறிப்பாக இராணுவ புலனாய்வுப் பிரிவு தொடர்பான தகவல்களை வெளியிடுவதையும் தற்போதைய நிலைமைகளை மோசமாக்கும் வகையிலான செய்திகளை வெளியிடுவதையும் தவிர்க்குமாறு -

ஊடகங்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுக்கவுள்ளார் என்றும் கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்

## தனபாலசிங்கம் யோகிதாஸ்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் தனபாலசிங்கம் அவர்களின் கனிஷ்ட புதல்வன் யோகிதாஸ் அவர் கள் 15.12.2005 அன்று காலை உயிர்நீத்தார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 15.12.2005 மாலை 5 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் நடை பெற்றது. இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஆ.தனபாலசிங்கம்
(சோதிலிங்கம் சுவாமியார்)

இணுவில் கிழக்கு,
இணுவில்.

(இ)

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# எதிரியால் எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதால் சுதந்திரமற்ற மக்களாக நாம் முடக்கப்பட்டோம்

## மாவை சேனாதிராஜா எம்.பி

யாழ்ப்பாணம்

பதின்மூன்று லட்சம் மக்கள் வாழ்ந்த யாழ்.மாவட்டத்தின் சனத்தொகை இன்று ஆறு லட்சமாகக் குறைந்து விட்டது. ஆயினும் -காணியில்லை, வீடில்லை, கட்டடங்களில்லை. சுதந்திரமாக ஒரு முனையிலிருந்து மறு முனை வரை ஆடிப்பாடி ஓடித் திரிந்த நிலம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில், சுதந்திரமற்ற மக்களாக முடங்கிப் போய் வாழுகின்றார்கள். அத்தகைய மக்களின் பங்களிப்புடன் இப்பாரிய பிரதேசசெயலகம் உருவாகி இருப்பதையிட்டு நான் பெருமைப் படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். அண்மையில் நடைபெற்ற வடமராட்சி தெற்கு, மேற்கு செயலக புதிய.கட்டடத்திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்-

இன்றைய இந்தப்பெருவிழா நிர்வாகக் கட்டமைப்புக்கான ஒரு கட்டடத்திறப்பு விழாவாக இருப்பினும், இதன் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பலவுண்டு. சபையில் சூழவுள்ள அதிகாரிகள், அரசாங்க அதிபரோ, உதவி அரசாங்க அதிபரோ, மேலதிக அரசாங்க அதிபரோ, பிரதி மாகாணச் சுகாதார பணிப்பாளரோ, யாரை எடுத்துக்கொண்டாலும் இந்த மண் வாசனை அவர்களிடம் வீசுவது மட்டுமன்றி அறிவாலும், ஆற்றலாலும் உயர்வடைந்த அதிகாரிகளாக ஆட்சி செலுத்துவது கண்டும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிலை தொடருமா என்பது இன்றைய வினாவாக எழுந்து நிற்கிறது. அரச இயந்திரத்தால் புறந்தள்ளப்படும் இன்றைய நிலையில்,எமது இளஞ்சந்ததியினரின் அறிவும், ஆற்றலும், திறமையும் ஓரங்கட்டப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. எம்மை நாமே ஆளுகின்ற நிலை உருவாகும் வரை இது தவிர்க்க முடியாது.

இந்த உண்மையை உணர்ந்த தந்தை செல்வா அன்று எமது மக்களை, 'எமது மண்ணை ஆளுகின்ற உரிமை எமக்கே உண்டு' என்று கூறினார். அந்தப் பாதையில் தம்பி பிரபா அவர்கள் தலைமை தாங்கி வழி நடத்தும் போராட்டத்தை வலுச்சேர்ப்பது எமது தலையாய கடமையாகும். எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு, உரிமை பறிக்கப்பட்ட போதும், எமது இறைமையை நாம் இழந்துவிடவில்லை என்ற யதார்த்தம் சுடர்விடத் தொடங்கிவிட்டது. அதை வளர்ப்பது எம் கடனாகும்.

இந்தப் பிரதேச செயலகக் கட்டடம் அமைப்பதற்குப் பாரிய பிரச்சினையாக இருந்தது நிலம். அந்த நிலத்தைப் பெறுவதில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பிரதேச செயலர் தெளிவுற விளக்கினார். இதே போன்றுதான் எமது பிரதேசம், எமது பாரம்பரிய நிலம் பறிபோன நிலையில், அதை மீட்க, எமக்கென்ற நிலத்தில் நாம் மீண்டும் சுதந்திரகீதம் இசைக்க எமது போராளிகள் பட்ட,படுகின்ற பாடுகளை நினைத்துப் பாருங்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீட்க ஆயுதம் ஏந்தினால், அவர்கள் பயங்கரவாதிகள். சுதந்திர மீட்புக்காக போராடிய எந்த நாடுகளையும் ஆட்சியாளர் அழைக்கும் பெயர் பயங்கரவாதிகள். அரபாத்தானாலும் சரி, அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்திமகானானாலும் சரி அவர்கள் பயங்கரவாதிகள். போர் வேண்டாமென்று ஒதுங்கினாலும், போராடித்தான் பெறவேண்டுமென்ற நிலை தோன்றும் போது நாம் சும்மாயிருக்க முடியாது.

பாரதி கூறியது போல் காணி நிலம் வேண்டும், அதில் மாடி வீடு கட்ட வேண்டும் என்பதற்கொப்ப நிலத்தைப் பறிகொடுத்த மக்கள் பலரின் பங்களிப்புடன் புதியதோர் நிலம் பெற்று, புது மாடிக் கட்டடம் அமைத்து உங்கள் பிரதேசங்களுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளீர்கள். இதற்காகப் பிரதேச செயலர் உட்பட பலரும் ஆற்றிய பங்களிப்புக்கள் தொடர்ந்தும் மக்களுக்காய் அர்ப்பணித்து ஆற்றுகின்ற சேவைகளிலேதான் நிறைவு பெறும். ஒவ்வொரு சாதாரண மக்களும் இந்தப் பிரதேச செயலகத்தினூடாக தமது தேவைகளை நிறைவு செய்து, மகிழ்ச்சியோடு வாழ வழிவகுக்கும் என்று முழுமையாக நம்புகிறேன் எனக் கூறினார். (13)

# நெடுந்தீவு கடற்தொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பு

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள வறுமையான கடற்தொழில் செய்யும் குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மீன்பிடி வலைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு சுமார் பதினைந்தாயிரம் பெறுமதியான வலைகள் நெடுந்தீவு கடற்தொழிலாளர் சங்கப் பணிமனையில் வைத்து கடந்த புதன்கிழமை மதியம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் கையளிக்கப் பட்டன.

இதேவேளை வலைகள் பெறுவதற்கென தெரிவு செய்யப்பட்ட சுமார் பத்துக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் உரியநேரத்துக்கு சமூகமளிக்காமையால், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் வழங்கவேண்டிய வலைகள் மீளவும் எடுத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# திருத்தப்படாத குறிகாட்டுவான் வீதியால் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமம்

நெடுந்தீவு

குறிகாட்டுவான் துறைமுக வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்திருப்பதால், அந்தப் பகுதியூடான வாகனப் போக்குவரத்து செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் இந்தத் துறைமுக வீதியில் ஒருபகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் திருத்தம் செய்யப்பட்ட போதும், மீதியான சுமார் 200 மீற்றர் வீதி திருத்தம் செய்யப்படாமல் உள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை இந்த வீதியின் இருபகுதியிலும் கடல் அலை அரிக்காமல் கொங்கிறீற் போடப்படாமையால், அண்மையில் ஏற்பட்ட கடும்காற்றுக் காரணமாகவும், ஏற்கெனவே மாறிமாறி வரும் பருவக் காற்றாலும் வீதி சேதமடைந்து, அகலம் குறைந்து வருவதுடன் - இதனூடான போக்குவரத்து தடைப்பட்டு விடும் நிலை நாளடைவில் ஏற்படாலமென அந்தப் பகுதியூடாக பயணிக்கும் தீவக மக்கள் விசனம் தெரிவித்துள்ளன்ர். (113)

# வேலணை - புங்குடுதீவு இணைப்பு பாலம் நீண்டகாலமாகத் திருத்தப்படவில்லை

வேலணை

வேலணை - புங்குடுதீவு இணைக்கும் பாலத்தின் வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்திருப்பதால், தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், பயணிகள் சேவையில் ஈடுபடும் வாகனங்களும், தனியார் வாகனங்களும் அடிக்கடி பழுதடையும் நிலையும் ஏற்படுகிறது.

நீண்ட காலமாக இந்தப் பாலத்தினது வீதியில் பெரும் பகுதிகளில் பாரிய குழிகள் நிறைந் திருப்பதுடன், ஆங்காங்கே சிறு குழிகளும் காணப்படுகிறது. இதனால் தற்போதைய மழைக் காலத்தில் வெள்ளநீர் நிறைந்து காணப்படுவதால், பெரும் அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்கொள்கின்றமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இதேவேளை, புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கும், புங்குடுதீவு வைத்தியசாலைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி வீதி கடந்த பல வருடமாக திருத்தப்படாமல் கிறவல் போடப்பட்டு, பாவனைக்குதவாத நிலையில் உள்ளமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (113)

# சிகையலங்கரிப்பு நிலையங்கள் திறக்கும்

யாழ்ப்பாணம்

எதிர்வரும் நத்தார் புத்தாண்டை முன்னிட்டு நாளை ஞாயிறும், முதலாம் திகதி ஞாயிறும் சிகை அலங்கார நிலையம் திறப்பதற்கு ஒன்றியம் அனுமதி அளித்துள்ளது.

# விநாயக விரத அபிஷேகம்

சாவகச்சேரி

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகர் ஆலயத்தில் விநாயகவிரதத்தை முன்னிட்டு நேற்று முதல் விசேட அபிஷேகமும், இலட்சார்ச்சனையும் ஆரம்பமாகியது. தினமும் பகல் 1 மணிமுதல் ஸ்நபன அபிஷேகமும், இலட்சார்ச்சனை மற்றும் பஞ்சமுக அர்ச்சனை என்பனவும் இடம்பெறும்.

ஜனவரி மாதம் 3 ஆம் திகதி மாலை கஜமுகாசுரபோரும், 4 ஆம் திகதி மஹாகணபதி ஹோமமும் இடம்பெறும். கிரியைகள் யாவும் சிவஸ்ரீ பாலமுரளிதரக் குருக்கள் தலைமையில் இடம் பெறும் என மேற்படி ஆலயநிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (24)

# குடத்தனையில் கரையொதுங்கிய சடலம்- வைத்தியசாலையிலுள்ளது

யாழ்ப்பாணம்

குடத்தனை - பொற்பதி கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கரையொதுங்கிய சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொற்பதியில் கரையொதுங்கிய இந்தச் சடலத்தைக் கண்ட கடற்படையினர் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். பொலிஸாரும், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி தே. அரியநாயகமும் சடலத்தைப் பார்வையிட்டனர். விசாரணைகள் நடத்தியபின்னர் சடலம் அடையாளம் காண்பதற்காக மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மந்திகை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்ட சடலம் போதிய குளிரூட்டி வசதி இன்மையால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

கரையொதுங்கிய சடலம் 40 வயது மதிக்கத்தக்க ஆளுடையது எனவும், அவர் மீனவராக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் மயிலிட்டி கடற்பரப்பில் சடலம் ஒன்று கரையொதுங்கியது தெரிந்ததே.

# மாதுமை மழலைகள் பூங்காவின் பரிசளிப்பும், மலர் வெளியீடும்!

மட்டுவில்

மட்டுவில் கிழக்கு மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் எதிர் வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை விரிவுரையாளர் ச.க.கண்ணதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில்- பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. ஜெ.இராசநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ந. இரவிராஜ், தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில் நினைவுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார். பரிசில் நாள் சிறப்பு மலரான 'மாதுமை' என்னும் இதழை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதிஅ.வேதநாயகம் வெளியிட்டுவைக்க, மலர் ஆய்வுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார். (24)

# பதவிநிலையில் மாற்றம்

யாழ்ப்பாணம்

கடந்த 1 ஆம் திகதியில் இருந்து கடலோட்டு இயந்திரவியல் மற்றும் கடல்வளத் திணைக்களத்தால் பதவி நிலைகளில் உயர்வுக்கு சிலர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு அதிபராக இருந்த இ.செபஸ்தியாம்பிள்ளை பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

கொழும்பு, மட்டக்குழி தலைமையகத்தில் இதுவரை தலைமை உதவி அதிகாரியாக இருந்து வந்த கப்டன் எஸ்.ஜெயசிங்க தலைமை அதிகாரியாகப் பதவி உயர்வுபெற்றுள்ளார். (206)



நல்லூர் றோட்டறிக் கழகமும் கொழும்பு கோட்டை றோட்டறிக் கழகமும் ஒன்றிணைந்து யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்தபோது நல்லூர் றோட்டறிக் கழக செயற்திட்ட இயக்குநர் றோட்டறி இ.மோகன் அவற்றை வழங்குவதையும் பொதுநூலக நூலகர் அதனை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். (111)





அண்மையில் இடம்பெற்ற சரசாலை, மட்டுவில் குடும்பமட்ட முன்பள்ளிகளின் சிறுவர்தின விழாவில் மழலைகள் மாலை சூடி ஊர்வலமாக அழைத்து வரப்படுவதைப் படங்களில் காணலாம். (24)

# கண்காணிப்புக்குழு வாகனத்தை ஓமந்தையில் தடுத்த படையினர்!

கொழும்பு—

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனத்தில் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்கு சக்திவாய்ந்த செய்மதி தொலைபேசியை எடுத்துச் செல்ல ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வாகனங்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் வழக்கமாக சோதனையிடப்படுவதில்லை.

கடந்த செவ்வாயன்று மாலை 4 மணியளவில் கண்காணிப்புக் குழுவின் வாகனம் புலிகளின் பிரதேசத்தை நோக்கிச் சென்றது.

கண்காணிப்புக் குழுவிற்கு சொந்தமானது என்று தெரியும் வகையில் அந்த வாகனத்துடன் மற்றொரு ட்ரக் வண்டியும் சென்றது.

ட்ரக் வண்டியை தடுத்த இரணுவ அதிகாரிகள் வாகனத்தை சோதனை செய்தனர்

வடக்கிற்கு பொருட்களைக் கொண்டுசெல்வதாக ட்ரக் வண்டியின் சாரதி தெரிவித்தார்.

வாகனத்தில் இருந்த அதி சக்தி வாய்ந்த செய்மதி ரக அன்டெனாவை கொண்டு செல்வது தடைசெய்யப் பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே அதனைக் கொண்டுவந்ததாகக் கூறிய சாரதி வாகனத்தை திருப்பிக் கொண்டுசென்று விட்டதாவும் தெரியவருகிறது.

# கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு காணி வழங்குமாறு அரச அதிபர் உத்தரவு

கிளிநொச்சி—

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு நிரந்தக் கட்டடம் அமைப்பதற்குக் காணி வழங்குமாறு - கிளிநொச்சி அரச அதிபர் கரைச்சிப் பிரதேச செயலருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற கல்விக்குழுக் கூட்டத்திலேயே இந்த உத்தரவை அரச அதிபர் வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகங்களில் இடம்பெறும் கல்விக் குழுக் கூட்டங்களில், தமது நிரந்தரப் பணிமனை அமைப்பதற்குக் காணியை வழங்குமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர், அரச அதிபரிடம் கோரியிருந்தார்.

இந்த நிலையிலேயே கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்குக் காணியை வழங்குமாறு, கரைச்சிப் பிரதேச செயலருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை, தற்போது மூடப்பட்டுள்ள நிலையில், பாடசாலையொன்றில் இயங்கிவருகிறது.

இதேவேளை-கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய இடங்களில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் அமைப்பதற்கான காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேமிப்புக் கணக்குப் புத்தகம் வழங்கல்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் மாவட்ட அலுவலகத்தில் 'ஜேர்மன் ரெக்கி'ன் அனுசரணையுடன் 25 மாவீரர் குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான சேமிப்புக் கணக்குப் புத்தகமும், மாவீரரை நினைவு கூரும் முகமாக தென்னை மரக்கன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த திங்களன்று நடைபெற்றது. ஜேர்மன் ரெக்கின் தலைவர் வலன்ரைன் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கருத்துரையை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளார் நிகழ்த்தினார்.

நிர்வாகப் பொறுப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர், மக்கள் கட்டுமானப் பயிற்சி ஆசிரியர், ஒட்டுசுட்டான் மாவீரர், போராளி குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர், தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

# பொது மருத்துவமனை ஏப்ரலில் திறக்கப்படும்

கிளிநொச்சி—

கிளிநொச்சி பொது மருத்துவமனை அடுத்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு இப்போது மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டட வேலைகள் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

தற்போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையே ஒது பொது மருத்துவமனைக்குரிய நிலையில் பலத்த இடர்களுக்கு மத்தியில் இயங்கிவருகிறது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் காணப்படும் முதன்மையான நெருக்கடியான இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு, பொது மருத்துவமனைக்குரிய கட்டடவேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கட்டட வேலைகள் நிறைவடைந்து, எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் பொது மருத்துவமனையை இயங்கவைப்பதற்கான நடவடிக்கையை, கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பணிமனையினர் மேற்கொண்டுள்ளனர்.

# துணைப்படைத் தொகுதியினர் பயிற்சி முடித்துவெளியேறினர்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில், 7 ஆவது மக்கள் துணைப்படைத் தொகுதியினர் கடந்த புதன் கிழமை 4 மணியளவில் தமது பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

அடம்பன் கருக்காகுளம் லெப்.கேணல்.விக்டர் பயிற்சிப் பாசறையில் இந்தப் பயிற்சிகள் நடைபெற்றன.

150 பேரைக் கொண்ட இந்த 7 ஆவது மக்கள் படைத் தொகுதியினர் மன்னார் முருங்கன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தப் பயிற்சி நிறைவு விழாவுக்கு, மட்டக்களப்பு தலைமைச் செயலகத் தளபதி சுரேஸ், மன்னார் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ஜான் ஆகியோர் கலந்துகொண்டதுடன், ஏராளமான பொது மக்களும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கள பேரினவாதத்தின் கொடும்பாவி எரிப்பு!

மன்னார்—


மன்னார் பெரியமடு ஈச்சமடு மக்கள் - சிங்களப் பேரினவாதத்தின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழவிட வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

அரசும், சர்வதேச சமூகமும் தமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தவறினால் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் அவர்கள் குரல் எழுப்பினர்.

அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்குமான கண்டன அறிக்கைகளும் போராட்டத்தின் முடிவில் கையளிக்கப்பட்டன.



பொருண்மிய மதியுரையகத்தில் நேற்று நடைபெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.




## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசம்பர் 17

1676 : உலகின் முதலாவது காப்புறுதிக் கம்பனியான ஸ்ரீ அபாயக் காப்புறுதி HAMBURGER GENERAL - FEUR - CASSA ஹம்பர்க் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1813 : எதிரி நாடுகளுடன் வர்த்தகம் செய்வதைத் தடை செய்வதான "வர்த்தகத் தடைச் சட்டத்தை" அமெரிக்க செனட் நிறைவேற்றியது.

1849 : முதன் முதலாக தொப்பி, லண்டனைச் சேர்ந்த தோமஸ் என்பவராலும் வில்லியம் பௌசர் என்பவராலும் தயாரிக்கப்பட்டது. வேட்டைக்குச் செல்லும்போது மரக்கிளைகள் தலையில் பட்டுக் காயம் ஏற்படுத்தாமலிருக்கும் நோக்கத்திற்காகவே இது செய்யப்பட்டது.

1897 : முதன் முதலாக பிரிட்டனில் நடுக்கடலில் வைத்து ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு வானொலி மூலம் செய்தி அனுப்பிக் காட்டினார் குக்கிளி மோ மார்க்கோணி.

1990 : வத்திக்கான் ரோம் நகரிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தின் "புனித கதவுகளை" மூடிய பாப்பரசர் 13 ஆவது லியோ அவர்கள் யூதர்களின் விடுதலை வருடம் முடிவடைந்ததாக அறிவித்தார்.

1903 : ஒஹியோவைச் சேர்ந்த வில்பர் ரைட்டும், ஆர்வில் ரைட்டும் வடகரோலினாவிலுள்ள கிட்டி ஹக் என்னுமிடத்தில் தாங்களே வடிவமைத்த 340 கிலோ எடையுள்ள விமானத்தில் பறந்துகாட்டினார்.

1913 : ஃப்ளோரிடாவில் பெர்முடா முக்கோணத்தில் ஜாக்ஸன் வில்லாவிற்கு கிழக்கே ஆறு பேர்களுடன் ஜோர்ஜ் ஏடாரி என்னும் சிறிய கப்பல் ஒன்று காணாமல் போனது.

1914 : எகிப்து, பிரிட்டிஸ் காப்பாட்சியின் கீழுள்ள நாடு என அறிவிக்கப்பட்டது.

1917 : ரஷ்யாவில் தேவாலய சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. மதபோதனைகள், பிரசாரங்கள் என்பன முற்றாக ஒழிக்கப்பட்டன.

1928 : ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.

1942 : "யூதர்கள் படுகொலை"யை வன்மையாகக் கண்டித்து, நேச நாடுகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டன.

1944 : அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த விமானம் தாங்கிக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள் கொண்ட படையணி ஒன்று பிலிப்பைன்ஸ் கடலில் கடும் சூறாவளிக் காற்றில் அகப்பட்டன. இதில் 8 கப்பல்களும், 146 விமானங்களும் முற்றாக அழிந்தன. 28 கப்பல்கள் சேதமடைந்தன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் கடலில் மூழ்கிவிட்டனர்.

1957 : அமெரிக்கா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

1964 : கொஸ்மிக் கதிர் பற்றிக் கண்டுபிடித்தமைக்காக 1963 ஆம் ஆண்டின் பௌதீகவியலுக்கான நோபிள் பரிசைப் பெற்றவரான அமெரிக்காவைச் சேர்ந்த விக்டர் பிரான்ஸ் ஹெறல் மரணமடைந்தார்.

1968 : இங்கிலாந்தில் முதன் முதலாக தசம முறை நாணயங்கள் வெளியிடப்பட்டன.

1975 : புலவர் சோ.இளமுருகனார் காலமானார்.

1976 : லண்டனில் "மவுஸ் டிராப்" என்ற நாடகம் தொடர்ந்தும் 10,000 ஆவது நாளாக நடந்து வருவதைக் குறிக்கும் வகையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

1986 : உலகிலேயே முதன் முறையாக கேம்பிரிட்ஜில் பாப்பொர்த் மருத்துவ மனையில் டேவினா தாம்ப்ஸன் என்பவருக்கு இதயம், நுரையீரல், கல்லீரல் ஆகியவற்றுக்கு மாற்று உறுப்பு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

1989 : ரூமேனியாவில் டிமிஸோ யொரா நகரின் தேவாலயம் முன்பாக அரச படைகளால், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 20,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள், சிறுவர்கள், முதியோர்கள் உட்பட சுட்டுக்கொல்லப்பட்டனர். புல்டோசர் மூலம் பாரிய புதைகுழிகளை வெட்டி அனைத்து உடல்களையும் போட்டு மூடினர் ரூமேனிய அரச படையினர். இந்த நடவடிக்கைகளுக்கான உத்தரவுகள் ரூமேனியாவின் சர்வாதிகாரியான நிக்காலேஸியா ஸெஸ்கு உடைய மனைவியினால் பிறப்பிக்கப்பட்டிருந்ததாம்.

1991 : அலாவுதீன் என்பவரும், அவரது மனைவி நீனா சௌத்திரியும் தங்களது நிஸ்ஸான் காரில் 40538 கிலோ மீற்றர் தூரத்தை அனைத்து கண்டங்களிலும் 39 நாட்கள் 20 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களில் பயணம் செய்து உலகசாதனை படைத்தனர்.

1998 : ஐக்கிய நாடுகளது ஆயுத பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக் மீது "பாலைவனத்து நரி" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

தொகுப்பு :- சந்துரு